# யோசுவாவின் புத்தகம்

**பாடம் 1**

## யோசுவாவின் புத்தகம் ஒரு அறிமுகம்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


**முன்னுரை** ..... **1**

**நூலாசிரியர் மற்றும் தேதி** ..... **1**

**பாரம்பரிய கண்ணோட்டங்கள்** ..... 2

**விமர்சனக் கண்ணோட்டங்கள்** ..... 4

**சுவிசேஷ கண்ணோட்டங்கள்** ..... 5

வளர்ச்சி ..... 5

நிறைவு ..... 6

**வடிவமைப்பு மற்றும் நோக்கம்** ..... **10**

**உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு** ..... 10

வெற்றிகரமான சுதந்தரிப்பு (1–12) ..... 12

கோத்திர மரபுரிமைகள் (13–22) ..... 12

உடன்படிக்கையின் உண்மைத்தன்மை (23–24) ..... 12

**அசல் அர்த்தம்** ..... 13

வெற்றிகரமான சுதந்தரித்தல் ..... 16

கோத்திர மரபுரிமைகள் ..... 21

உடன்படிக்கை விசுவாசம் ..... 23

**கிறிஸ்தவ** *பயன்பாடு* ..... **26**

**ராஜ்யத்தின் தொடக்கம்** ..... 28

வெற்றிகரமான சுதந்தரித்தல் ..... 28

கோத்திர மரபுரிமைகள் ..... 29

உடன்படிக்கை விசுவாசம் ..... 29

**ராஜ்யத்தின் தொடர்ச்சி** ..... 30

வெற்றிகரமான சுதந்தரித்தல் ..... 30

கோத்திர மரபுரிமைகள் ..... 31

உடன்படிக்கை விசுவாசம் ..... 31

**ராஜ்யத்தின் நிறைவு** ..... 32

வெற்றிகரமான சுதந்தரித்தல் ..... 33

கோத்திர மரபுரிமைகள் ..... 33

உடன்படிக்கை விசுவாசம் ..... 33

**முடிவுரை** ..... **34**





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

உலகெங்கிலும் உள்ள மக்கள் தங்கள் தேசங்கள் நிறுவப்பட்டபோது நடந்த பெரிய நிகழ்வுகளில் மகிழ்ச்சியடைவது பொதுவானது. ஆனால் பிற்கால தலைமுறையினர் சவால்கள், இழப்புகள் மற்றும் ஏமாற்றங்களை எதிர்கொள்ளும்போது, நீண்ட காலத்திற்கு முந்தைய அந்த நிகழ்வுகளின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு நினைவூட்டுவது பெரும்பாலும் அவசியமாகும். பல வழிகளில், இந்த பொதுவான அனுபவம் யோசுவாவின் பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் பிரதிபலிக்கிறது. இஸ்ரவேலர் கானானிலிருந்த தங்கள் தாயகத்திற்குள் முதன்முதலில் நுழைந்தபோது பெரிய சம்பவங்கள் நடந்திருந்தன. ஆனால் பிற்கால தலைமுறையினர் கஷ்டங்களை எதிர்கொண்டபோது, அந்த நிகழ்வுகள் எவ்வளவு முக்கியமானவை என்பதை அவர்கள் புதிதாகத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

யோசுவாவின் புத்தகத்தைப் பற்றிய நமது தொடரின் முதல் பாடம் இது, அதற்கு "யோசுவாவின் புத்தகம் ஒரு அறிமுகம்" என்று தலைப்பிட்டுள்ளோம். நாம் பார்க்கப்போகிறபடி, யோசுவாவின் புத்தகம் பண்டைய இஸ்ரவேலுக்கு என்ன அர்த்தமாக இருந்தது என்பதை நாம் கற்றுக்கொள்ளும்போது, நம் நாளிலும் அது நமக்கு எவ்வளவு வழங்க வேண்டும் என்பதைப் பார்க்க நாம் சிறந்த முறையில் தயாராக இருப்போம்.

யோசுவாவின் புத்தகத்தைப் பற்றிய நமது முன்னுரை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், அதன் ஆசிரியர் மற்றும் தேதியை ஆராய்வோம். இரண்டாவதாக, அதன் வடிவமைப்பு மற்றும் நோக்கம் பற்றிய கண்ணோட்டத்தை அறிமுகப்படுத்துவோம். மூன்றாவதாக, இந்த புத்தகத்தின் கிறிஸ்தவ பயன்பாடுகளைப் பார்க்கும்போது நாம் மனதில் கொள்ள வேண்டிய பல பரந்த பரிசீலனைகளை வரைவோம். யோசுவாவின் புத்தகத்தினுடைய ஆசிரியர் மற்றும் தேதியுடன் ஆரம்பிக்கலாம்.

# நூலாசிரியர் மற்றும் தேதி

அது உண்மையான வரலாற்று பதிவுகளை நமக்குத் தரும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் யோசுவாவின் புத்தகத்தை ஏவினார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் வேதத்தினுடைய ஆசிரியர்களின் முன்னோக்குகளையும் நோக்கங்களையும் அவர்களின் வரலாற்று பதிவுகளை வடிவமைக்க



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பயன்படுத்தினார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, வேதத்தின் மற்ற ஒவ்வொரு பகுதியையும் போலவே, மனித எழுத்தாளரையும் அவரது காலங்களையும் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு சிறப்பாக யோசுவாவின் புத்தகத்தை நாம் புரிந்துகொள்வோம்.

யோசுவாவின் ஆசிரியர் மற்றும் தேதி குறித்த மூன்று கண்ணோட்டங்களை சுருக்கமாக வரைவோம்: முதலாவது, பாரம்பரிய கண்ணோட்டங்கள்; இரண்டாவது, நவீன விமர்சனக் கண்ணோட்டங்கள்; மூன்றாவதாக, இந்த பாடத்தில் நம்மை வழிநடத்தும் சில அடிப்படை சுவிசேஷ கண்ணோட்டங்கள். நமது புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி குறித்த பழமையான, பாரம்பரிய கண்ணோட்டங்களுக்கு முதலில் திரும்புவோம்.

## பாரம்பரிய கண்ணோட்டங்கள்

யோசுவாவின் புத்தகத்தை எழுதியவர் யார் என்று தெரியவில்லை. இந்தப் புத்தகமோ அல்லது வேதாகமத்தின் மற்ற பகுதிகளோ அதன் இறுதித் தொகுப்பாளர் அல்லது ஆசிரியர் யார் என்பதை நமக்குச் சொல்லவில்லை. நம்முடைய நவீன வேதாகமங்கள் பலவற்றில் காணப்படும் ”யோசுவாவின் புத்தகம்” என்ற தலைப்பு எழுதப்பட்டு வெகு காலத்திற்குப் பிறகு புத்தகத்தில் சேர்க்கப்பட்டது. ஆனால் இந்த விஷயங்களில் பாரம்பரிய பண்டைய யூத மற்றும் கிறிஸ்தவ நிலைப்பாடுகளின் போக்குகள் யூத பாரம்பரிய புத்தகமான டால்முட்டில் வெளிப்படுத்தப்பட்ட ரபீக்களின் முன்னோக்குகளில் அழகாக சுருக்கப்பட்டுள்ளன.

டிராக்டெட் பாபா பத்ரா 15 (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) என்று அழைக்கப்படும் டால்முட்டின் பகுதியில் தொடர்ச்சியான கேள்விகள் மற்றும் பதில்களில் இவ்வாறு நாம் வாசிக்கிறோம்:

> யோசுவா தனது புத்தகத்தை எழுதினார் [நீங்களே அப்படிச் சொல்கிறீர்கள்]. ஆனால் ”கர்த்தருடைய ஊழியக்காரனாகிய நூனின் குமாரனாகிய யோசுவா மரித்தான்” என்று எழுதியிருக்கவில்லையா? – இது எலெயாசரால் முடிக்கப்பட்டது. ஆனால் அதில் ”ஆரோனின் குமாரனாகிய எலெயாசார் மரித்தான்” என்று எழுதப்பட்டிருக்கிறது – பினெகாஸ் அதை முடித்தார்.

நாம் இங்கே பார்க்கிறபடி, முன்னணி ரபீக்கள் யோசுவாவை இந்த புத்தகத்தினுடைய பெரும்பகுதியின் ஆசிரியர் என்று அடையாளம் காட்டினர். ஆனால் யோசுவாவினுடைய புத்தகத்தின் சில பகுதிகள் யோசுவா மரித்த பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். 24:29 இல் யோசுவாவின் மரணத்திற்கு பிரதான

ஆசாரியனாகிய எலெயாசார் தான் காரணம் என்று அவர்கள் கூறினர். அவர்கள் 24:33 இல் எலெயாசாரின் மரணத்தின் கணக்கை எலெயாசாரின் குமாரன் பினெகாசுக்கு ஒதுக்கினர். இந்த பாரம்பரிய கண்ணோட்டத்தில், யோசுவாவின் புத்தகம் புத்தகத்தின் நிகழ்வுகளுக்குப் பிறகு மிக ஆரம்பத்தில் எழுதப்பட்டது.

உண்மையில், டால்முட்டின் குறிப்பிட்ட கூற்றுக்களை ஆதரிக்க எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் யோசுவா, எலெயாசார் மற்றும் பினெகாஸ் ஆகியோர் இந்த வேதாகம புத்தகத்திற்கு பங்களித்திருக்கலாம் என்ற சாத்தியத்தை நாம் முற்றிலும் நிராகரிக்கக்கூடாது. யாத்திராகமம் 17:14-லேயே, இஸ்ரவேலின் ஆரம்பகால சரித்திர பதிவுகளை பாதுகாப்பதில் யோசுவா ஈடுபட்டிருந்தார் என்பதை நாம் அறிகிறோம். மேலும், யோசுவா 8:32 மற்றும் 24:26 போன்ற பகுதிகளில் சடங்கு பயன்பாட்டிற்காக தேவனுடைய பிரமாணத்தை எழுதுவதை யோசுவா மேற்பார்வையிட்டார். இதே வரிசையில், எலெயாசார் மற்றும் அவரது குமாரனான பினெகாஸ் போன்ற ஆசாரியர்களும் லேவியர்களும் வேதாகமத்தைக் கையாளுவதிலும் கற்பிப்பதிலும் முக்கிய பங்கு வகித்தனர்.

சில தருணங்களில், யோசுவாவின் ஆசிரியர் தனது புத்தகத்தை இயற்றியபோது பல்வேறு எழுதப்பட்ட ஆதாரங்களை நம்பியிருந்தார். யோசுவா, எலெயாசர், பினெகாஸ் மற்றும் அவர்களைப் போன்ற மற்றவர்கள், குறைந்தபட்சம், இந்த ஆதாரங்களுக்கு மறைமுகமாக பங்களித்திருக்கலாம்.

> யோசுவாவின் புத்தகம் அது எழுதப்பட்டதைப் பற்றிய சில குறிப்புகளை நமக்குத் தருகிறது. 18 ஆம் அதிகாரத்தில் இது ஏழு கோத்திரத்தாரைப் பற்றி கூறுகிறது, அவர்கள் தங்கள் பங்கைப் பெறவில்லை, எனவே அவர்கள் இதைப் பற்றி யோசுவாவுடன் பேசினர், அவர் அந்த கோத்திரத்தாரை தேசத்திற்குள் சென்று நிலம் எப்படி இருந்தது என்பதைப் பற்றி ஒரு அறிக்கையை எழுதும்படி கட்டளையிட்டார், அவர்கள் அந்த அறிக்கையுடன் திரும்பி வந்தனர். அநேகமாக, 18-20 அதிகாரங்களில் காணப்படும் விளக்கமாக இது செயல்பட்டது என்று எனக்குத் தோன்றுகிறது, இந்த கோத்திரத்தாருக்கு அவர்களின் நிலம் ஒதுக்கப்பட்டதைப் பற்றி அவர்கள் பேசும்போது, அது அவர்கள் எடுத்த நகரங்களையும் நிலத்தின் எல்லைகளையும் விவரிக்கிறது. எனவே, அந்த மூன்று அதிகாரங்களின் அந்தப் பகுதி அநேகமாக நிலத்தை வேவு பார்க்க அனுப்பியவர்கள் அந்த விவரிப்புடன் திரும்பி வந்ததைப் பற்றிய ஒரு ஆரம்பகால எழுத்தாக இருக்கலாம்... யோசுவா நியாயப்பிரமாண புத்தகத்தில் எழுதினார் என்று 24 ஆம் அதிகாரம் நமக்குச் சொல்கிறது, அந்த நேரத்தில் அவர் இஸ்ரவேல் புத்திரருடன்

> செய்து கொண்டிருந்த உடன்படிக்கையையாவது அது உள்ளடக்கியிருக்கலாம். இது மோசே எழுதிய நியாயப்பிரமாண புத்தகமாக இருக்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது, ஏனென்றால் யோசுவா அதை கர்த்தருக்கு முன்பாக நிறுத்துவார் - அவர் அதை எழுதுகிறார்; அவர் அதை கர்த்தருக்கு முன்பாக வைக்கிறார் - மோசேயின் பொருள் கர்த்தருக்கு முன்பாக வைக்கப்பட்டதைப் போலவே, வெளிப்படையாக ஆசரிப்புக் கூடாரத்தில் ஒரு பரிசுத்த வைப்பாக வைக்கப்பட்டது. எனவே, யோசுவாவின் இந்த பகுதியும் யோசுவாவின் புத்தகத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளது. நிலத்தைப் பற்றிய விளக்கமும், யோசுவாவின் முடிவில் காணப்படும் உடன்படிக்கையின் கணக்கும் நம்மிடம் இருந்தால், யுத்தங்களுடன் தொடர்புடைய மற்ற கணக்குகள், இவ்வளவு விவரங்களைக் கொண்டிருக்கும். இது பல நோக்கங்களுக்காக அநேகமாக மிக ஆரம்பத்தில் யோசுவாவால் எழுதப்பட்டிருக்கலாம்.
>
> – Dr. சிப் மெக்டேனியல்

யோசுவாவின் ஆசிரியர் மற்றும் தேதியைப் பற்றிய இந்த பாரம்பரிய கண்ணோட்டங்களை மனதில் கொண்டு, வேதாகமத்தின் முழு அதிகாரத்தையும் நிராகரிக்கும் நவீன அறிஞர்கள் பொதுவாக வைத்திருக்கும் கண்ணோட்டங்களான நவீன விமர்சனக் கண்ணோட்டங்களைக் கருத்தில் கொள்வோம்.

## விமர்சனக் கண்ணோட்டங்கள்

யோசுவாவைப் பற்றிய சமீபத்திய விமர்சன அறிஞர்கள் 1943 இல் எழுதப்பட்ட மார்ட்டின் நோத்தின் படைப்பான டியூட்டிரானமிஸ்டிக் கிஸ்டரியால் ஆழமான தாக்கமடைந்துள்ளனர். சுருக்கமாக, உபாகமம், யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல், இராஜாக்கள் ஆகிய புத்தகங்கள் பாபிலோனிய நாடுகடத்தலின்போது "உபாகமவாதி" என்று பொதுவாக கருதப்படும் ஒருவரால் எழுதப்பட்டன என்பது நோத்தின் கருத்து. இந்த நோக்குநிலையிலிருந்து, உபாகமம் புத்தகம் உட்பட உபாகம சரித்திரம் முழுவதும், பாபிலோனிய நாடுகடத்தலின் போது எழுதப்பட்ட பல்வேறு முந்தைய மூலங்களிலிருந்து இயற்றப்பட்டது. இந்த புத்தகங்களின் முக்கிய நோக்கம், வடக்கு மற்றும் தெற்கு ராஜ்யங்களுக்கு ஏற்பட்ட தோல்வி மற்றும் நாடுகடத்தலின் நியாயத்தீர்ப்புக்கு இஸ்ரவேல் தகுதியானது தான் என்பதை நிரூபிப்பதாகும்.

பல தசாப்தங்களாக, பெரும்பாலான விமர்சன அறிஞர்கள் நோத்தின் பல மைய முன்னோக்குகளை உறுதிப்படுத்தியுள்ளனர், குறிப்பாக பாபிலோனிய

நாடுகடத்தலின் போது புத்தகம் எழுதப்பட்ட காலத்தைக் கண்டுபிடிக்க முயற்சி செய்துள்ளனர். இருப்பினும், பழைய ஏற்பாட்டினுடைய இந்த பகுதியின் தனிப்பட்ட புத்தகங்களின் தனித்துவமான இறையியல் கண்ணோட்டங்களை அடையாளம் காண நோத் தவறிவிட்டார் என்று பல விமர்சன அறிஞர்கள் சரியாக வாதிட்டுள்ளனர். இந்த புத்தகங்களில் தோன்றும் நேர்மறையான, நம்பிக்கையான கண்ணோட்டங்களை நோத் கவனிக்கவில்லை என்று அவர்கள் வாதிட்டனர்.

இந்த புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி குறித்த பாரம்பரிய மற்றும் விமர்சனக் கண்ணோட்டங்களைப் பார்த்தபின், சில நவீன சுவிசேஷ கண்ணோட்டங்களைக் கருத்தில் கொள்வோம். வேதத்தின் முழு அதிகாரத்தையும் உறுதிப்படுத்தும் அறிஞர்கள் வைத்திருக்கும் முன்னோக்குகள் தான் அவையாகும். இந்த பாடங்கள் முழுவதும் யோசுவாவின் புத்தகத்தை அணுகுவதற்கு இந்த முன்னோக்குகள் வழிகாட்டும்.

## சுவிசேஷ கண்ணோட்டங்கள்

நாம் ஏற்கனவே கவனித்தபடி, யோசுவாவின் புத்தகம் யாரால் எழுதப்பட்டது என்று தெரியாது. இதன் விளைவாக, சுவிசேஷகர்கள் அதன் ஆசிரியர் மற்றும் தேதி குறித்து பல்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டிருந்தனர். இருப்பினும், இரண்டு அவதானிப்புகளைச் செய்வது உதவியாக இருக்கும். முதலில், புத்தகத்தினுடைய தொகுப்பு வளர்ச்சி என்று நாம் அழைப்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, அதை முடிப்பதற்கான சாத்தியமான தேதிகளின் வரம்பை ஆராய்வோம். யோசுவாவின் படைப்பு வளர்ச்சியை முதலில் கவனிக்கவும்.

### வளர்ச்சி

இந்த புத்தகத்தின் வளர்ச்சியைப் பற்றி நாம் பேசும்போது, பல பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களைப் போலவே, யோசுவாவின் ஆசிரியர் தனது வரலாற்றை புதிதாக எழுதவில்லை அல்லது முற்றிலும் ஆரம்பத்திலிருந்து எழுதவில்லை. மாறாக, அவர் தனது புத்தகத்தை உருவாக்கியபோது பல்வேறு எழுதப்பட்ட ஆதாரங்களைத் தொகுத்தார். நாம் இப்போது பார்த்தபடி, டால்முட் மற்றும் திறனாய்வு அறிஞர்கள் நமது புத்தகம் ஒருவித தொகுப்பு வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது என்று கூறுகின்றனர். மேலும், பெருமளவில், சுவிசேஷக சபையார்களும் நமது ஆசிரியர் ஆதாரங்களைப் பயன்படுத்தியதை ஒப்புக்கொள்கிறார்கள்.

இது ஒரளவிற்கு உண்மை என்பதை நாம் உறுதியாக அறிவோம், ஏனென்றால் 10:13 இல், நமது ஆசிரியர் நேரடியாக யாசாரின் புத்தகம் அல்லது சுருளிலிருந்து மேற்கோள் காட்டினார். இந்த புத்தகத்தைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது, ஆனால் தெளிவாக ஆசிரியரும் அவரது அசல் வாசகர்களும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்தனர். இதற்கு அப்பால், இந்தத் தொடர் முழுவதும் நாம் பார்ப்பது போல, நமது ஆசிரியர் மீண்டும் மீண்டும் ஐந்தாகமத்தின் பகுதிகளையும், பல்வேறு வகையான வேதாகமத்திற்கு புறம்பான நூல்களையும் இணைத்தார். நிறைய ஊகங்களுக்குள் செல்லாமல் இந்த அடையாளம் காணப்படாத ஆதாரங்களை நாம் மீண்டும் கட்டமைக்க முடியாது. ஆனால் நமது ஆசிரியர் யாஷரின் புத்தகம் போன்ற முந்தைய ஆதாரங்களைப் பயன்படுத்தினார் என்பதை அறிவது, அவரது புத்தகம் ஏன் மீண்டும் மீண்டும் மற்றும் சில நேரங்களில் தொடர்பற்றதாக உணர்கிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

முந்தைய ஆதாரங்களின் இந்த பயன்பாடு இந்த புத்தகத்தின் இறுதி படிவத்தின் தேதியை அடையாளம் காணும்போது ஒரு பொதுவான தவறைத் தவிர்க்க உதவுகிறது. பதினைந்து சந்தர்ப்பங்களில், இந்த அல்லது அந்த சூழ்நிலை ”இந்நாள்வரை” உண்மையாக இருந்தது என்று யோசுவாவின் புத்தகம் சொல்கிறது. இயற்கையாகவே, ”இன்றுவரை” என்ற சொற்றொடர் ஆசிரியரின் நேரத்தைக் குறிக்கிறது என்று நினைப்பது எளிது. ஆனால், 1 இராஜாக்கள் 8:8 போன்ற பகுதிகளில் தெளிவாக உள்ளது போல, சில நேரங்களில் ”இந்த நாள்வரை” என்ற சொற்றொடர் உண்மையில் முந்தைய ஆதாரங்களின் நாட்களைக் குறிக்கலாம்.

யோசுவாவினுடைய புத்தகத்தின் ஒருவித கலவை வளர்ச்சி இருந்தது என்று சுவிசேஷக சபையார் பொதுவாக ஒப்புக்கொண்டாலும், இந்த புத்தகம் எப்போது நிறைவடைந்தது? இப்போது வேதாகமத்தில் உள்ளபடி அது எப்போது ஒன்றிணைக்கப்பட்டது என்று நாம் இன்னும் கேட்கிறோம்.

## நிறைவு

பல பழைய ஏற்பாட்டு புத்தகங்களைப் போலவே, நமது ஆசிரியர் யோசுவாவின் புத்தகத்தை அதன் இறுதி வடிவத்திற்கு எப்போது கொண்டு வந்தார் என்பதை நாம் துல்லியமாக அடையாளம் காண முடியாது. ஆரம்ப மற்றும் சமீபத்திய சாத்தியமான தேதிகளுக்கான சாத்தியக்கூறுகளின் வரம்பை அடையாளம் காண மட்டுமே சான்றுகள் நம்மை அனுமதிக்கின்றன. ஆனால், இந்த பாடங்களில் நாம் பார்ப்பது போல, இந்த முழு அளவிலான சாத்தியக்கூறுகளை மனதில் கொள்ளும்போது, நமது ஆசிரியர் தனது அசல் வாசகர்களை பாதிக்கும் வகையில் தனது புத்தகத்தை எவ்வாறு வடிவமைத்தார் என்பதைப் பற்றிய பல நுண்ணறிவுகளைப் பெறுகிறோம்.

யோசுவாவின் புத்தகத்தை முடிக்க இந்த கால வரம்பை இரண்டு படிகளில் பார்ப்போம். முதலில், முடிக்கும் சமீபத்திய தேதியை நாம் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, சாத்தியமான ஆரம்ப தேதியை ஆராய்வோம். யோசுவா எழுதப்பட்டிருக்கக்கூடிய சமீபத்திய சாத்தியமான நேரத்திலிருந்து ஆரம்பிக்கலாம்.

யோசுவாவினுடைய இறுதி தொகுப்பின் சமீபத்திய சாத்தியமான தேதியை தீர்மானிக்க சிறந்த வழிகளில் ஒன்று, புத்தகத்திற்கு வெளியே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பார்ப்பதாகும். இன்று பல அறிஞர்கள் இஸ்ரவேலின் முதன்மை வரலாறான ரூத்தைத் தவிர்த்து ஆதியாகமம் முதல் இராஜாக்கள் வரை நீண்டுள்ள வரலாற்றை நமது ஆசிரியர் நனவுடன் பங்களித்தார் என்பதற்கு நல்ல சான்றுகள் உள்ளன. இந்த முன்னோக்கு முக்கியமானது, ஏனென்றால் இந்த புத்தகங்கள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட இணைப்புகளைப் போல ஒன்றன் பின் ஒன்றாக ஒரு காலவரிசையை உருவாக்குகின்றன.

இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள்: ஐந்தாகமத் தொகுப்பு மோசேயின் நாட்களிலிருந்து வருகிறது மற்றும் இந்த வரலாற்று ”சங்கிலியில்” ஐந்து இணைப்புகளின் முதல் தொகுப்பைக் கொண்டுள்ளது. ஆதியாகமம் சிருஷ்டிப்பில் தொடங்கி எகிப்தில் யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களுடன் முடிவடைகிறது. யாத்திராகமம் ஆதியாகமத்தின் இருப்பை அனுமானிக்கிறது, ஏனெனில் இது யோசேப்பின் மரணத்துடன் காலவரிசையை எடுத்து சீனாய் மலையில் மோசே மற்றும் இஸ்ரவேலுடன் முடிவடைகிறது. சீனாய் மலையில் நடந்த சம்பவங்களை அறிவிப்பதன் மூலம் லேவியராகமம் நம்மை மேலும் வழிநடத்துகிறது. சீனாய் மலையிலிருந்து மோவாபின் சமவெளிகளுக்கு இஸ்ரவேலர் மேற்கொண்ட பயணங்களைப் பற்றிய பதிவை எண்ணாகமம் சேர்க்கிறது. மோவாபின் சமவெளிகளில் மோசேயின் பேச்சுகளோடும் மோசேயின் மரணத்தோடும் ஐந்தாகமத் தொகுப்பை உபாகமம் முடிக்கிறது.

இதேபோல், யோசுவாவின் புத்தகம் முதன்மை வரலாற்றின் அடுத்தடுத்த உபாகமப் பகுதியின் முதல் இணைப்பாகும். இது உபாகம புத்தகத்தின் இறையியல் கண்ணோட்டங்களை பெரிதும் சார்ந்திருந்த பகுதியாகும். யோசுவாவின் ஆசிரியர் மோசேயின் மரணத்துடன் தொடங்கி யோசுவாவின் மரணம் வரை தொடர்ந்தார். யோசுவாவின் புத்தகம் முடிவடையும் இடத்தில் நியாயாதிபதிகளின் புத்தகம் இஸ்ரவேலின் வரலாற்றை தொடர்கிறது. சாமுவேல் என்ற மனிதன் இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியாக எழும்புவதோடு தொடங்கி தாவீதின் ஆட்சியோடு இது முடிவடைகிறது. தாவீதின் மரணத்தில் தொடங்கி பாபிலோனிய நாடுகடத்தலில் முடிவடைவதன் மூலம் இராஜாக்கள் முதன்மை வரலாற்றின் கடைசி கட்டத்தை உருவாக்குகின்றன. இந்த அர்த்தத்தில், இராஜாக்களின் புத்தகம் உபாகம சரித்திரத்தின் முந்தைய எல்லா புத்தகங்களிலிருந்தும் வருகிறது. இந்த உண்மை யோசுவாவின் நிறைவுக்கான சமீபத்திய தேதியைப் பற்றி முக்கியமான ஒன்றை நமக்குச் சொல்கிறது: இராஜாக்களின் புத்தகம் எழுதப்படுவதற்கு முன்பு இது முடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இராஜாக்களின் புத்தகம் எப்போது எழுதப்பட்டது என்பதைப் பற்றி நமக்கு நிறைய தெரியும் என்பதால் இந்த அவதானிப்பு உதவியாக இருக்கும். இராஜாக்களில் அறிவிக்கப்பட்ட கடைசி நிகழ்வு 2 இராஜாக்கள் 25:27-30 இல் தோன்றுகிறது. தாவீதின் அரச வம்சத்தில் வந்த யோயாக்கீன் கி.மு 561 இல் பாபிலோன் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார் என இங்கு அறிகிறோம். இந்த காரணத்திற்காக, இந்த தேதிக்கு முன்னர் இராஜாக்களின்

புத்தகம் முடிக்கப்படவில்லை என்பதை நாம் உறுதியாக நம்பலாம். இதற்கும் மேலாக, இராஜாக்களின் புத்தகம், கி.மு 538 இல் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலர் விடுதலை செய்யப்பட்டதை அறிவிப்பதோடு நிறுத்திக் கொள்கிறது. இராஜாக்களின் எழுத்தாளர் அந்த புத்தகத்தை எழுதிய நேரத்தில் இஸ்ரவேலின் விடுதலை நிகழ்ந்திருந்தால், அதை பதிவு செய்திருப்பாரா என்பதை கற்பனை செய்ய முடியாது. எனவே, இஸ்ரவேலின் முதன்மை சரித்திர வரிசைமுறைக்கு இசைவாக, யோசுவாவின் புத்தகம் முடிக்கப்பட்டிருக்கக்கூடிய மிகச் சமீபத்திய புத்தகம் பாபிலோனிய சிறையிருப்பின் காலப்பகுதியாகும்.

இந்த சமீபத்திய சாத்தியமான தேதியை மனதில் கொண்டு, நாம் வேறு திசையில் பார்க்க வேண்டும். யோசுவா எழுதி முடிக்கப்பட்ட தேதி எது? யோசுவாவின் புத்தகம் அதன் இறுதி வடிவத்தை எட்டியிருக்கக்கூடிய ஆரம்பகால புத்தகம் நியாயாதிபதிகளின் காலத்தில், யோசுவாவின் மரணத்திற்கு ஒரு தலைமுறை அல்லது அதற்குப் பிறகு இருந்தது என்பதைக் காண்பது கடினம் அல்ல. 24:31 இல் நமது ஆசிரியர் தனது புத்தகத்தின் முடிவில் எழுதியதைக் கவனிக்கவும்:

> யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப்பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள்" (யோசுவா 24:31).

இந்த வேதப்பகுதி "யோசுவாவைக் கடந்து வாழ்ந்த மூப்பர்களை" குறிக்கிறது என்பதைக் கவனிக்கவும். இந்த வரிசைகளில், "கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் செய்த அனைத்து வேலைகளையும் வாழ்நாள் முழுவதும் அறிந்திருந்த இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்தார்கள்" என்றும் வாசிக்கிறோம். இஸ்ரவேலின் ஆவிக்குரிய நிலையைப் பற்றிய இந்த நேர்மறையான மதிப்பீடு நமது ஆசிரியரைப் பற்றி ஏதோ ஒன்றைக் குறிக்கிறது. யோசுவாவின் மரணத்திற்குப் பிறகு அடுத்த தலைமுறை தொடர்ந்து தேவனை உண்மையுடன் சேவிக்கவில்லை என்கிற நியாயாதிபதிகளின் புத்தகத்தில் சிறப்பிக்கப்பட்டுள்ள காரியத்தை அவர் அறிந்திருக்க வேண்டும். ஆகவே, நியாயாதிபதிகளின் காலப்பகுதியே இந்த புத்தகம் முடிக்கப்பட்ட காலம் என்பதை இவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது.

யோசுவாவின் மற்ற பகுதிகளும் நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்த சம்பவங்களைக் குறிப்பிடுகின்றன. உதாரணமாக, யோசுவா 19:47 வடக்கில் ஒரு புதிய பிரதேசத்திற்கு தாணியர்கள் குடிபெயர்ந்ததைக் குறிப்பிடுகிறது. இந்த நிகழ்வு நியாயாதிபதிகள் 18:27-29 படி நியாயாதிபதிகளின் காலத்தில் நடந்தது. எனவே, புத்தகத்தை முடிப்பதற்கான ஆரம்ப தேதி இது என்று சொல்வது நியாயமானது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ராஜாக்கள் ஆண்ட காலத்தில் ஒரு தேதியை பல வியாக்கியான அறிஞர்கள் வாதிட்டுள்ளனர் என்பதையும் நாம் குறிப்பிட வேண்டும். பல காரணங்களுக்காக, இது உண்மையில் இறுதி தொகுப்பின் ஆரம்ப தேதி என்று அவர்கள் முடிவு செய்துள்ளனர். இந்த சாத்தியத்தை நாம் நிராகரிக்க முடியாது. இந்த கண்ணோட்டத்திற்கான முதன்மை சான்றுகள் யோசுவா 11:21 இல் தோன்றுகின்றன, அங்கு நாம் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> அக்காலத்திலே யோசுவா போய், மலைத்தேசமாகிய எபிரோனிலும் தெபீரிலும் ஆனாபிலும் யூதாவின் சகல மலைகளிலும் இஸ்ரவேலின் சகல மலைகளிலும் இருந்த ஏனாக்கியரை நிக்கிரகம்பண்ணி, அவர்களை அவர்கள் பட்டணங்களோடும்கூடச் சங்கரித்தான் (யோசுவா 11:21).

நாம் இங்கே பார்க்கிறபடி, இந்த வசனம் "யூதாவின் மலைநாடு" அல்லது தென்புற ராஜ்யத்தை, "இஸ்ரவேலின் மலைநாடு" அல்லது வட ராஜ்யத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான இந்த வேறுபாடு, ஏறக்குறைய கி.மு 930 இல் இஸ்ரவேல் இராஜ்யம் பிரிக்கப்படுவதற்கு முன்பு நமது புத்தகம் எழுதப்பட்டிருக்க முடியாது என்று சிலருக்கு உணர்த்துகிறது. ஆனால் இதைச் சொன்ன பிறகு, பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்பின் குறைந்தபட்சம் ஒரு பதிப்பாவது இந்த வேறுபாட்டைச் செய்யவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். எபிரெய அல்லது கிரேக்க மொழிபெயர்ப்பு சிறந்த வாசிப்பை பிரதிநிதித்துவம் செய்கிறதா என்பதில் அறிஞர்கள் கருத்து வேறுபாடு கொள்கிறார்கள். எனவே, யோசுவா 11:21 ராஜ்யத்தின் பிரிவினையை ஒப்புக்கொள்வது சாத்தியம் என்றாலும், அது உறுதியாக இல்லை.

இந்த எல்லா ஆதாரங்களையும் நாம் ஒன்றிணைப்போமானால், யோசுவா முடிக்கப்படுவதற்கான மிக ஆரம்ப தேதி நியாயாதிபதிகளின் காலப்பகுதியாகும். ஆனால் முடியாட்சி காலத்தின் பிந்தைய தேதியும் சாத்தியமாகும். பாபிலோனிய சிறையிருப்பின் காலம் போன்ற ஒரு தேதி கூட கேள்விக்குறியாக இல்லை. நாம் ஒரு கணத்தில் பார்ப்பது போல, இந்த முழு அளவிலான சாத்தியக்கூறுகளை அங்கீகரிப்பது, யோசுவாவின் புத்தகம் எதிர்கொள்ள வடிவமைக்கப்பட்ட சவால்களின் வகைகளை இன்னும் முழுமையாக புரிந்துகொள்ள உதவுகிறது.

யோசுவா புத்தகத்தின் எழுத்தாளர் மற்றும் தேதியைப் பற்றி நாம் கற்றுக்கொண்டதை மனதில் வைத்து, இப்போது இரண்டாவது அறிமுகக் கருத்தான புத்தகத்தின் வடிவமைப்பு மற்றும் நோக்கத்திற்கு திரும்ப வேண்டும். யோசுவாவின் நாட்களைப் பற்றிய பதிவை நமது ஆசிரியர் எவ்வாறு வடிவமைத்தார்? அவர் ஏன் அதை இந்த வழியில் வடிவமைத்தார்?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# வடிவமைப்பு மற்றும் நோக்கம்

யோசுவா போன்ற வேதாகம வரலாற்று புத்தகத்தை நாம் படிக்கும்போதெல்லாம், அதே வரலாற்று நிகழ்வுகளை பிழைகள் இல்லாமல் பல வழிகளில் சொல்ல முடியும் என்பதை நினைவில் கொள்வது எப்போதும் முக்கியமாகும். வரலாற்று நிகழ்வுகளை அறிவிக்கும் ஒவ்வொரு வேதாகம புத்தகமும் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் அதன் அசல் வாசகர்களுக்கு சில முன்னோக்குகளை வலியுறுத்துவதற்கும் அது அறிக்கையிடும் வரலாற்றை ஒழுங்கமைக்கிறது.

இந்த விஷயங்களை நாம் பின்வரும் பாடங்களில் இன்னும் விரிவாகப் பார்ப்போம், ஆனால் இந்த கட்டத்தில் யோசுவாவின் வடிவமைப்பையும் நோக்கத்தையும் இரண்டு படிகளில் வரைவோம். முதலில், அதன் பரந்த உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு, புத்தகத்தின் பெரிய அளவிலான ஏற்பாடு ஆகியவற்றை அறிமுகப்படுத்துவோம். இரண்டாவதாக, அதன் அசல் அர்த்தத்தைப் பற்றி நாம் கருத்து தெரிவிப்போம், அதாவது நமது ஆசிரியர் தனது அசல் வாசகர்களிடம் ஏற்படுத்த விரும்பிய தாக்கத்தைப் பார்ப்போம். முதலில் யோசுவாவின் உள்ளடக்கத்தையும் கட்டமைப்பையும் கவனிக்கவும்.

## உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு

யோசுவாவின் புத்தகம் இருபத்தி நான்கு அதிகாரங்களைக் கொண்டுள்ளது, அவை பல வகையான இலக்கியங்களைக் கொண்டுள்ளன. பல்வேறு மூலங்களிலிருந்து வந்த விவரிப்புகள், அறிக்கைகள், உரைகள் மற்றும் நபர்கள் மற்றும் இடங்களின் பட்டியல்களை நாம் காண்கிறோம். இதன் காரணமாக, வியாக்கியான அறிஞர்கள் யோசுவாவின் கட்டமைப்பு விவரங்களை வெவ்வேறு வழிகளில் பகுப்பாய்வு செய்துள்ளனர். ஆனால் அதன் கட்டமைப்பும் உள்ளடக்கமும் பெரிய அளவில் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுகின்றன என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல.

> பழைய ஏற்பாட்டு அறிஞர்கள் வேதத்தில் உள்ள பல்வேறு புத்தகங்களுக்குள் வகையை நியமிக்க அல்லது அடையாளம் காண வெவ்வேறு வழிகளைக் கொண்டுள்ளனர், ஆனால் பொதுவாக, யோசுவாவின் புத்தகத்தில் மூன்று முக்கிய வகையான இலக்கியங்கள் உள்ளன. எரிகோ யுத்தத்தின் கதை போன்ற நாம் சாதாரணமாக புரிந்து கொள்ளக்கூடிய விவரிப்புகள் அல்லது கதைகள் என்று நாம் அழைக்கும் விஷயங்கள் அதில் உள்ளன. தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பல்வேறு கோத்திரங்கள் சுதந்தரித்த இடங்களின் நீண்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பட்டியல்களும், புவியியல் பட்டியல்களும் அதில் உள்ளன, மேலும் அவை ஒன்றன்பின் ஒன்றாக பட்டியலிடப்பட்டிருக்கின்றன. பின்னர் இது ஒரு குறிப்பிட்ட நபரால் மற்றொரு குழுவினருக்கு வழங்கப்படும் பேச்சு அல்லது உரைகள் உள்ள பிரிவுகளையும் கொண்டுள்ளது. புத்தகத்தின் முதல் பெரிய பிரிவு மற்றும் இரண்டாவது பெரிய பிரிவு மற்றும் மூன்றாவது பெரிய பிரிவு ஆகியவற்றுடன் தோராயமாக தொடர்புபடுத்தும் அந்த மூன்று பெரிய வகைகளில் இதைப் பற்றி நீங்கள் சிந்தித்தால் நீங்கள் பார்க்க முடியும். முதலாவது முதன்மையாக விவரிப்பும், இரண்டாவது முதன்மையாக புவியியல் பட்டியல்களும், மூன்றாவது முதன்மையாக உரைகளும் இருக்கின்றன. ஆனால் பிரச்சனை இந்த வழியில் வருகிறது, அது என்னவென்றால், அந்த முக்கிய அல்லது குடை வகை பதவிகளுக்குள் மற்ற இரண்டும் எப்போதும் கசிந்து கொண்டே இருக்கும்... எனவே, யோசுவாவின் புத்தகத்தில் இந்த பல்வேறு பிரிவுகளையும் இந்த பல்வேறு வகைகளையும் நாம் கையாளும்போது, அவற்றை மனதில் வைத்திருப்பது மிகவும் முக்கியம், மேலும் நீங்கள் அவற்றைக் கண்டுபிடிக்கவும் முடியும். வியாக்கியான அறிஞர்கள், குறிப்பாக புதியவர்கள் அல்லது பழைய ஏற்பாட்டின் புதிய மாணவர்களுக்கு இருக்கும் குழப்பத்தின் மிகப்பெரிய புள்ளிகளில் ஒன்று, அவர்கள் இந்த பல்வேறு வகைகளை அங்கீகரிக்க மாட்டார்கள், மேலும் அவர்கள் நடத்தப்பட வேண்டிய வழிகளில் அவற்றை நடத்த மாட்டார்கள். நாம் யோசுவாவின் புத்தகத்தை அணுகும்போது, யோசுவாவின் புத்தகத்தை அணுகும்போது, அந்த பல்வேறு வகைகளில் நீங்கள் கவனம் செலுத்தவில்லை என்றாலோ, அவை புத்தகத்தின் வெவ்வேறு பகுதிகளில் எவ்வாறு ஒன்றாகக் கலக்கப்படுகின்றன என்பதை அறியாவிட்டாலோ, அது பெரும் குழப்பத்திற்கு வழிவகுக்கும்.
>
> — Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

சுருக்கமாக, யோசுவா மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் காலத்தின் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கும் ஒரு அறிக்கையுடன் தொடங்குகிறது. முதல் பிரிவு, 1-12 அதிகாரங்களில், கானானை இஸ்ரவேல் வெற்றிகரமாக கைப்பற்றியதில் கவனம் செலுத்துகிறது. அதாவது யோசுவா கானானியர்கள் மீது ஒரு தீர்க்கமான வெற்றிக்கு இஸ்ரவேலை எவ்வாறு வழிநடத்தினார் என்பதில் கவனம் செலுத்துகிறது. இந்த பிரிவு 1:1 இல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

"மோசேயின் மரணத்திற்குப் பிறகு" தேவன் யோசுவாவுக்கு நியமித்தார் என்ற தற்காலிக அறிவிப்புடன் இது தொடங்குகிறது.

## வெற்றிகரமான சுதந்தரிப்பு (1–12)

இந்தப் பன்னிரண்டு அதிகாரங்களில், யோசுவாவின் புத்தகம் கானான் தேசத்தைக் கைப்பற்றியபோது நடந்த அநேக சம்பவங்களை அறிவிக்கிறது. இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்து எரிகோவிலும் ஆயியிலும் ஆரம்ப வெற்றிகளைப் பெறுவதிலிருந்து அவை தொடங்குகின்றன. இந்த வெற்றிகளைத் தொடர்ந்து கெரிசீம் மலை மற்றும் ஏபால் மலைக்கு அருகாமையில் உடன்படிக்கை புதுப்பித்தல் விழா நடைபெறுகிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் தெற்கு பிராந்தியங்களில் ஒரு கூட்டணிக்கு எதிராக யோசுவாவின் முக்கிய பிரச்சாரத்தை நோக்கி கதை நகர்கிறது. இந்தப் பதிவைத் தொடர்ந்து வடக்குப் பிராந்தியங்களில் ஒரு கூட்டணிக்கு எதிராக யோசுவாவின் பிரச்சாரம் வருகிறது.

## கோத்திர மரபுரிமைகள் (13–22)

நமது புத்தகத்தின் இரண்டாவது பிரிவு, 13-22 அதிகாரங்களில், இஸ்ரவேலின் கோத்திர மரபுரிமைகளைப் பற்றி விவாதிக்கிறது. அதாவது இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு குறிப்பிட்ட சொத்து ஒதுக்கப்பட்டதால் இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமை எவ்வாறு பராமரிக்கப்பட்டது என்பதை விவாதிக்கிறது. இந்த பிரிவு 13:1 இல் "இப்போது யோசுவா வயதில் முதிர்ந்தவரானார்" என்கிற தற்காலிக அறிக்கையுடன் தொடங்குகிறது.

யோசுவாவின் இந்த இரண்டாவது பெரிய பிரிவு, யோர்தானுக்கு கிழக்கிலும் மேற்கிலும் யோர்தான் நதிக்கு மேற்கே உள்ள நிலங்கள் ஆகிய இரண்டிலும் தேவன் இஸ்ரவேலுக்கு வழங்கிய பிரதேசங்களின் பரப்பளவை முதலில் நிறுவியது. யோர்தானுக்கு கிழக்கில் குடியேற அனுமதி பெற்ற கோத்திரத்தாருக்கு குறிப்பிட்ட நிலங்கள் ஒதுக்கப்பட்டதை அது சற்று விரிவாக விளக்குகிறது. யோர்தானுக்கு மேற்கே யூதா, எப்பிராயீம், மனாசே ஆகிய பெரிய பிராந்தியங்களையும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரங்களுக்கு சிறிய பிராந்தியங்களையும் தேவன் எவ்வாறு கொடுத்தார் என்பதையும் இது விவரிக்கிறது. யோர்தானுக்கு மேற்கிலுள்ள மற்றும் கிழக்கிலுள்ள கோத்திரத்தாரிடையே மோதல் எழுந்தபோது, அவர்கள் தேவனுடைய மக்களாக தங்கள் தேசிய ஒற்றுமையை எவ்வாறு காத்தார்கள் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம்.

## உடன்படிக்கையின் உண்மைத்தன்மை (23–24)

மூன்றாவது பெரிய பிரிவு, 23,24 அதிகாரங்களில், இஸ்ரவேலின் உடன்படிக்கை விசுவாசத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் நமது புத்தகத்தை முடிக்கிறது. அதாவது தேவனுடைய உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இஸ்ரவேலின் விசுவாசமும் விசுவாசமின்மையும் அவர்களின் எதிர்காலத்தை எவ்வாறு வடிவமைக்கும் என்பதில் முடிகிறது. இது 23:1 இல் மற்றொரு அறிக்கையுடன் தொடங்குகிறது, இது நேரம் கடந்து செல்வதை நம்மை எச்சரிக்கிறது. "கர்த்தர் இஸ்ரவேலைச் சுற்றிலும் இருந்த அவர்களுடைய எல்லாச் சத்துருக்களாலும் யுத்தமில்லாதபடிக்கு இளைப்பாறப்பண்ணி அநேகநாள் சென்றபின்பு, யோசுவா வயதுசென்று முதிர்ந்தவனானபோது" என்று வாசிக்கிறோம். இந்த தற்காலிக அறிவிப்பு 14 வது வசனத்தில் யோசுவாவின் வார்த்தைகளான "இதோ, இன்று நான் பூலோகத்தார் எல்லாரும் போகிற வழியே போகிறேன்" என்பதுடன் வலுப்படுத்தப்படுகிறது.

இந்தப் புத்தகத்தின் இந்தக் கடைசி இரண்டு அதிகாரங்கள், யோசுவா மரித்த சமயத்தில் நடந்த இரண்டு கூடுகைகளில் கவனத்தை செலுத்துகின்றது. இந்த கூடுகைகளில் முதல் மாநாடு ஒருவேளை சீலோவில் நடந்திருக்கலாம். இது யோசுவாவின் நாளிலும் பிற்பாடு நியாயாதிபதிகளின் காலத்திலும் முக்கிய பாகத்தை வகித்த ஒரு பரிசுத்த இடமாகும். கானான் தேசத்தில் ஆபிரகாம் தம்முடைய முதல் பலிபீடத்தைக் கட்டிய இடமாகிய சீகேமில் நடந்த கடைசி கூட்டத்துடன் அது முடிவடைகிறது. இஸ்ரவேலர் எல்லாரும் இந்த கூடுகைகளில் கூடிவந்தனர், தேவனுடைய உடன்படிக்கையை வெளிப்படையாக மீறுவதைக் குறித்து யோசுவா அவர்களை எச்சரித்தார். தேவனுக்கு மட்டுமே உண்மையுள்ளவர்களாக இருப்பதற்கான தங்கள் பொறுப்பை புதுப்பிக்க இஸ்ரவேல் மக்களை யோசுவா வழிநடத்துவதோடு நமது புத்தகத்தின் முக்கிய பகுதி முடிவடைகிறது. அவர்கள் மற்ற எல்லா நாடுகளின் தேவர்களையும் நிராகரித்து, அவர்களுடன் செய்த உடன்படிக்கையின் விதிமுறைகளின்படி தங்கள் பிதாக்களின் தேவனை சேவிப்பதாக பொருத்தனை செய்தனர். இந்த உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, யோசுவாவின் மரணத்தையும் அதைத் தொடர்ந்து நடந்த பல சம்பவங்களையும் உள்ளடக்கிய ஒரு பிற்போக்குரையுடன் புத்தகம் முடிவடைகிறது.

புத்தகத்தின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு யோசுவாவின் வடிவமைப்பு மற்றும் நோக்கத்தை நாம் ஆராய்ந்தோம். யோசுவாவின் அசல் அர்த்தத்தை எவ்வாறு சுருக்கமாகக் கூறுவது என்று கேட்கும் நிலையில் இப்போது நாம் இருக்கிறோம். இந்த ஆசிரியர் தனது புத்தகத்தை எழுதுவதற்கான நோக்கம் என்ன?

## அசல் அர்த்தம்

பல வழிகளில், யோசுவாவின் ஆசிரியர் ஒவ்வொரு வேதாகம எழுத்தாளரும் பகிர்ந்து கொண்ட நோக்கங்களுடன் எழுதினார் என்று சொல்வது நியாயமானது. அவர் தேவனை மகிமைப்படுத்த தனது புத்தகத்தை வடிவமைத்தார். தேவனுடைய உடன்படிக்கைகளின் கொள்கைகளை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவருடைய அசல் வாசகரின் கருத்துகள், நடத்தைகள் மற்றும் உணர்ச்சிகளுடன் பொருத்துவதன் மூலம் அவர் தேவனுடைய ராஜ்யத்தை மேலும் வளர்க்க முயன்றார். ஆனால் யோசுவாவின் புத்தகத்தை நாம் படிக்கையில், நமது ஆசிரியர் தனது புத்தகத்தை எழுதியபோது தனது வாசகர்கள் மீது கொண்டிருந்த சிறப்பு முக்கியத்துவத்தையும் நாம் அடையாளம் காணலாம்.

யோசுவாவின் அசல் அர்த்தத்தை சுருக்கமாகக் கூற பல வழிகள் உள்ளன, ஆனால் நமது நோக்கங்களுக்காக, அதை இந்த வழிகளில் வெளிப்படுத்துவோம்:

> யோசுவாவின் நாளில் இஸ்ரவேலின் வெற்றி, கோத்திர சுதந்தரம் மற்றும் உடன்படிக்கை விசுவாசம் ஆகியவற்றைப் பற்றி பிற்கால தலைமுறையினர் எதிர்கொள்ளும் இதே போன்ற சவால்களை எதிர்கொள்ள யோசுவாவின் புத்தகம் எழுதப்பட்டது.

நாம் பார்க்கிறபடி, இந்தச் சுருக்கம் யோசுவா புத்தகத்தின் பின்வரும் மூன்று முக்கிய பிரிவுகளைக் குறிக்கிறது: வெற்றிகரமான சுதந்தரித்தல், கோத்திர சுதந்தரம் மற்றும் உடன்படிக்கை விசுவாசம். ஆனால் நமது ஆசிரியர் ஏன் இந்த விஷயங்களில் கவனம் செலுத்தினார்? நம்முடைய சுருக்கம் குறிப்பிடுகிறபடி, முதலாவதாக, யோசுவாவின் நாளில் நடந்த சம்பவங்களை அவர் தன் வாசகருக்கு நினைப்பூட்ட நாடினார். இரண்டாவதாக, பிற்கால சந்ததியினரையும் அவர்கள் எதிர்கொண்ட இதே போன்ற சவால்களையும் எதிர்கொள்ள அவர் எழுதினார். யோசுவாவின் நாளைப் பற்றி நமது ஆசிரியர் ஏன் எழுதினார் என்பதில் தொடங்கி, இந்த இரண்டு நோக்கங்களையும் பார்ப்போம்.

யோசுவா இஸ்ரவேலை வழிநடத்தியபோது நடந்த சம்பவங்களை அது மிக வெளிப்படையாக விவரிக்கிறது என்பது யோசுவாவின் புத்தகத்தை அறிந்த அனைவருக்கும் தெரியும். பின்வருவன இவற்றில் அடங்கும்: கானானை இஸ்ரவேலர் வெற்றிகரமாய் கைப்பற்றியது, இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களை யோசுவா பிரித்தது, தேவனுக்கு இஸ்ரவேல் உடன்படிக்கையின் உண்மைப் பற்றுறுதி ஆகியன. எனவே, நமது ஆசிரியரின் மைய நோக்கங்களில் ஒன்று "அந்த உலகத்தில்" என்ன நடந்தது என்பதை அசல் வாசகர்களுக்குத் தெரிவிப்பது என்று சொல்வது நியாயமானது. பல பழைய ஏற்பாட்டு பகுதிகள் இஸ்ரவேலர் கடந்த காலத்தில் தேவன் அவர்களுக்குச் செய்ததை மறந்ததால் அடிக்கடி தங்கள் வழியை இழந்தனர் என்பதை வலியுறுத்துகின்றன. 24:31 இல், "இஸ்ரவேலுக்காக கர்த்தர் செய்த எல்லா காரியங்களையும் அறிந்திருந்தவர்களிடமிருந்து" தன்னையும் தன் வாசகர்களையும் வேறுபடுத்திக் காட்டியபோது, இது அவரது அசல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாசகர்களுக்கு ஒரு பிரச்சனையாக இருந்தது என்று நமது ஆசிரியர் சுட்டிக்காட்டினார்.

யோசுவாவின் நாட்களில் என்ன நடந்தது, அவர்கள் நியாயாதிபதிகளின் காலத்தில், முடியாட்சியின் போது வாழ்ந்தார்களா, அல்லது பாபிலோனிய நாடுகடத்தப்பட்ட காலத்தில் வாழ்ந்தார்களா என்பதை நமது புத்தகத்தின் அசல் வாசகர்களுக்கு நினைவூட்ட வேண்டியிருந்தது. ஆகையால், ஒரு அடிப்படை மட்டத்தில், யோசுவாவின் நாளில் நிறைவேற்றப்பட்டதைப் பற்றிய உண்மையான பதிவை தனது அசல் வாசகர்களுக்கு வழங்குவதற்காக யோசுவாவின் ஆசிரியர் எழுதினார் என்று நாம் சொல்லலாம்.

இரண்டாவதாக, நமது சுருக்கம் குறிப்பிடுவது போல, யோசுவாவின் புத்தகமும் பிற்கால தலைமுறையினரின் சவால்களை எதிர்கொள்ள எழுதப்பட்டது. நமது ஆசிரியர் இரண்டு உலகங்களுக்கு இடையில் நின்றார்: யோசுவாவின் நாளில் இஸ்ரவேலின் உலகமான "அந்த உலகம்" மற்றும் அசல் வாசகர்களின் உலகமான" 'அவர்களின் உலகம்." இந்த காரணத்திற்காக, நமது ஆசிரியர் வெறுமனே வரலாற்று உண்மைகளுக்கு உண்மையாக இருக்கும் ஒரு பதிவை எழுதவில்லை. இஸ்ரவேலின் வெற்றிகரமான சுதந்தரிப்பு, கோத்திர சுதந்தரங்களின் பங்கீடு மற்றும் "அந்த உலகத்திற்கும்" "அவர்களின் உலகத்திற்கும்" இடையிலான அர்த்தமுள்ள தொடர்பு அல்லது இணைப்புகளை வழங்க உடன்படிக்கை விசுவாசத்திற்கான அழைப்பு பற்றியும் அவர் எழுதினார். மற்ற வேதாகம எழுத்தாளர்களைப் போலவே, அவர் தனது வாசகர்களின் தற்போதைய சலுகைகள் மற்றும் பொறுப்புகளின் தோற்றத்தை விளக்கும் வரலாற்று பின்னணிகளை அடிக்கடி சுட்டிக்காட்டினார். அவர்கள் பின்பற்ற அல்லது நிராகரிக்க மாதிரிகளையும் அவர் வழங்கினார். சில சந்தர்ப்பங்களில், அவர் தனது அசல் வாசகர்களுடைய அனுபவங்களின் முன்னறிவிப்பாக யோசுவாவின் காலங்களைப் பற்றிய கணக்குகளை எழுதினார்.

இந்த வகையான இணைப்புகள் நம் ஆசிரியரைப் பற்றி நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றை வெளிப்படுத்துகின்றன. ஒருபக்கம், யோசுவாவின் நாளில் நடந்தவற்றை தன்னுடைய வாசகர் ஞாபகத்தில் வைக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் மறுபக்கத்தில், யோசுவாவின் நாளில் இஸ்ரவேலர் செய்ததைப் போலவே துல்லியமாக காரியங்களைச் செய்வதற்கு அவர்கள் திரும்புவதை அவர் விரும்பவில்லை. அவரது அசல் வாசகர்கள் வேறு காலகட்டத்தில் வாழ்ந்தனர். அதோடு, அவருடைய சரித்திரப் பதிவைத் தங்கள் வாழ்க்கைக்குப் பொருத்தமான விதத்தில் பொருத்திப் பார்க்க வேண்டியிருந்தது.

> யோசுவாவின் புத்தகத்தினுடைய அசல் வாசகர்கள் அதன் செய்தியால் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்று நான் நம்புகிறேன்... தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள்

> அனைத்தும், இஸ்ரவேலர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் வருவதைக் குறித்து அவர்களுக்கு நிறைவேற்றப்பட்டன. அவற்றில் ஒன்று கூட தோல்வியடையவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உண்மையுள்ளவராயிருப்பார் என்று மக்களுக்கு கற்பிப்பதற்காக என்று நான் நினைக்கிறேன். நியாயாதிபதிகளின் காலத்திற்குள் அவர்கள் நகர்வதில் இது மிகவும் முக்கியமானது, ஏனென்றால் நியாயாதிபதிகளின் காலத்தில் அவர்கள் தங்கள் சொந்த பார்வையில் சரியானதைச் செய்கிற மக்களாக விவரிக்கப்படுவதைக் காண்கிறோம், ஆனால் அவர்கள் அழைக்கப்பட்டிருப்பது கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கிறது. எனவே, யோசுவாவின் வாழ்க்கையிலும், யோசுவாவுடன் உண்மையுள்ளவர்களிடம் அவர்கள் காணும் ஒரு செய்தி இதுவாகும், அவர்கள் இப்போது இருக்கும் இடத்தின் வெளிச்சத்தில், இந்த தலைமுறை உண்மையிலேயே யோசுவாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை. உண்மையில், மனந்திரும்பி வருவதற்கான ஒரு அழைப்பாகும்.
>
> – Dr. டி.ஜே. பெட்ஸ்

இப்போது சில நேரங்களில், அசல் வாசகர்கள் இந்த வரலாற்றுப் பதிவை தங்கள் வாழ்க்கையில் எவ்வாறு பொருத்தினார்கள் என்பதைப் புரிந்துகொள்வது நவீன வியாக்கியான அறிஞர்களுக்கு கடினமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக, நமது ஆசிரியர் இந்த விஷயங்களை தனது புத்தகத்தில் பேசவில்லை. ஆனால் நம் நூலாசிரியரும் அவருடைய வாசகரும் தங்கள் நாளில் கிடைக்கக்கூடிய வேதவசனங்களான ஐந்தாகமத் தொகுப்பிலிருந்து கற்றுக்கொண்ட சில நோக்குநிலைகளை நாம் நினைவில் வைக்க வேண்டும். இந்த முன்னோக்குகளை மனதில் கொண்டு, "அவர்களின் உலகத்திற்கு" "அந்த உலகம்" பற்றிய நமது ஆசிரியரின் பதிவின் தாக்கங்களை முதலில் தோன்றும் அளவுக்கு பிரித்தறிவது கடினம் அல்ல.

## வெற்றிகரமான சுதந்தரித்தல்

ஆரம்ப வாசகருக்கு இஸ்ரவேலின் வெற்றிகரமான சுதந்தரிப்பின் தாக்கங்களை புரிந்துகொள்வதற்கு ஐந்தாகமத் தொகுப்பு எவ்வாறு மேடையை அமைத்தது என்பதைக் கவனிக்கவும். நமது புத்தகத்தின் இந்த பிரிவு யோசுவாவின் மகத்தான வெற்றிகளின் பதிவைக் கொடுத்தது. ஆனால்

யோசுவாவின் இந்தப் பகுதியை எவ்வாறு பொருத்திப் பிரயோகிக்கலாம் என்பதைக் காண ஐந்தாகமத் தொகுப்பிலிருந்து பெறப்பட்ட மூன்று அடிப்படை போர் நோக்குநிலைகள் அவர்களுக்கு உதவின.

**ஆதிகால பிரச்சனை.** முதலாவதாக, தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான ஆதி மோதலில் வேரூன்றிய ஒரு போரில் அவர்கள் ஈடுபட்டிருப்பதை நமது ஆசிரியர் மற்றும் அவரது அசல் வாசகர்கள் இருவரும் அறிந்திருந்தனர். மனித வரலாறு முழுவதும், பாவத்தில் விழுந்த பிறகு, தேவனும் சாத்தானும் மோதலில் இருந்திருக்கிறார்கள் என்பதை ஆதியாகமம் 3:15 குறிக்கிறது. இந்த கண்ணுக்குத் தெரியாத போராட்டம், சர்ப்பத்தின் வித்து அல்லது சந்ததியினர் அல்லது சாத்தானிய வல்லமைகளுக்கு சேவை செய்யும் மக்களுக்கும் ஸ்திரீயின் வித்து அல்லது சந்ததியினருக்கு இடையிலும் காணப்படுகிறது. இதனால்தான் யோசுவாவின் புத்தகம் இஸ்ரவேலின் மோதலை வெறும் சரீரப்பிரகாரமான போராக சுருக்கவில்லை. மாறாக, யோசுவா 5:14 இல், நமது ஆசிரியர் தேவதூதனை "கர்த்தருடைய சேனையின் அதிபதி" என்று குறிப்பிட்டார். யோசுவாவும் இஸ்ரவேலின் இராணுவமும் தேவனும் அவருடைய தேவதூத சேனையும் சம்பந்தப்பட்ட ஒரு போரில் பங்கேற்றனர் என்பதை இந்த பகுதி சுட்டிக்காட்டுகிறது. மேலும், யோசுவா 23:16 போன்ற பகுதிகள் குறிப்பிடுவது போல, கானானியரின் சாத்தானிய தேவர்கள் இஸ்ரவேல் மக்களுக்கு எதிராக கானானியருடன் நின்றார்கள் என்பதையும் நமது ஆசிரியர் அங்கீகரித்தார். யோசுவாவின் ஆரம்ப வாசகர்கள் இஸ்ரவேலின் வெற்றியிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருந்தது, ஏனென்றால் யோசுவாவின் நாளிலிருந்த இஸ்ரவேலரைப் போலவே, தேவனுக்கும் சாத்தானுக்கும் அவர்களைச் சேவித்தவர்களுக்கும் இடையில் நடந்துகொண்டிருக்கும் இந்த மோதலில் அவர்கள் ஈடுபட்டிருப்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

**இஸ்ரவேலின் சிறப்பு மோதல்.** இரண்டாவதாக, யோசுவாவின் வெற்றி இஸ்ரவேலின் தனிப்பட்ட மோதல் என்பதையும் ஐந்தாகமம் தெளிவுபடுத்தியது. இஸ்ரவேலின் சுதந்தரித்தலிலிருந்து ஆரம்ப வாசகர் நிறைய கற்றுக்கொள்ள முடிந்தாலும், அவர்களும் வரவிருக்கும் தலைமுறைகளும் அதை எல்லா நுட்பவிவரத்திலும் பின்பற்ற வேண்டியதில்லை. யோசுவாவின் நாள் அசாதாரணமானது என்று ஐந்தாகமம் தெளிவுபடுத்தியது.

ஆதியாகமம் 15:13-16-ல், ஆபிரகாமின் சந்ததியினர் எகிப்தில் ஒரு காலத்திற்கு அடிமைப்படுத்தப்படுவார்கள் என்று தேவன் ஆபிரகாமிடம் கூறினார், ஏனெனில் "எமோரியரின் அக்கிரமம்" (கானானியர்களுக்குரிய மற்றொரு பெயர்) "[இன்னும் முழுமையடையவில்லை]." ஆனால் யோசுவாவினுடைய வெற்றியின் நேரத்தில், ஆபிரகாமின் நாட்களில் சோதோம் மற்றும் கொமோராவை அழிக்க தேவன் அழைத்ததைப் போலவே, கானானிய பாவம் மிகவும் அருவருக்கத்தக்கதாக வளர்ந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதனால்தான் நமது ஆசிரியர் ஐந்தாகமத்தின் சொற்களஞ்சியத்திலிருந்து எடுத்து, எபிரெய வினைச்சொல்லான (சாரம் என்று தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) charam חָרַם)) மற்றும் பெயர்ச்சொல்லான *cherem (சேரம் என்று தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது)* (חֵרֶם) ஆகியவற்றைப் பயன்படுத்தி கானானின் அழிவை விவரித்தார். யோசுவா 6:17,19 மற்றும் 21 விளக்குவது போல், யோசுவாவின் வெற்றியின் சூழலில், இந்த சொற்கள் வெறுமனே ”அழிப்பது” என்பதை மட்டும் அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, அவை ”கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணிப்பது” அல்லது ”கர்த்தருக்கான பக்தியில் அழிப்பது” என்று அர்த்தப்படுத்தின. ஆகவே, இஸ்ரவேலர் கானானில் போர் செய்தபோது, அது வெளிப்படையான கானானியரின் பாவத்திற்கு எதிரான தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பை ஒப்புக்கொள்வதாக இருந்தது. ஆராதனையில் தேவனை கனப்படுத்தும் செயலாக அவர்கள் கைப்பற்றிய அனைத்தையும் அழித்து அர்ப்பணித்தனர்.

யோசுவாவின் நாளில் முழுமையான அழிவு மற்றும் கர்த்தருக்கு பக்தி செலுத்துவதற்கான இந்த கட்டளை பல காரணங்களுக்காக அசாதாரணமானது என்பதை நாம் அறிவோம். ஒன்று, உபாகமம் 20:10-20-ல், மோசே கானானியருக்கு மொத்த அழிவை உண்டுபண்ணினார், ஆனால் கானான் தேசத்திற்கு வெளியே உள்ள மக்களுக்கு சமாதான ஒப்பந்தங்களை வழங்குமாறு அவர் இஸ்ரவேலுக்கு கட்டளையிட்டார். யோசுவா இந்த வேறுபாட்டை யோசுவா 9 இல் ஒப்புக்கொண்டார், அவர் கிபியோனியருடன் ஒரு உடன்படிக்கை செய்தபோது, அவர்கள் கானானுக்கு வெளியிலிருந்து வந்தவர்கள் என்று நம்பினார்.

இது தவிர, யோசுவாவுக்கு முன்னும் பின்னும் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையே நடந்து கொண்டிருந்த மோதல் எவ்வாறு வெவ்வேறு வடிவங்களை எடுத்தது என்பதை நாம் நினைவுகூரும்போது யோசுவாவினுடைய வெற்றியின் அசாதாரண தன்மை தெளிவாகிறது. ஒரு சில உதாரணங்களைக் குறிப்பிட, யோசுவாவுக்கு முன்பு, ஆதியாகமம் 11: 1-9 இல், தேவனும் அவரது பரலோக சேனையும் பாபேல் கோபுரத்தில் கலகக்கார மனிதர்களுக்கு எதிராக போருக்குச் சென்றனர். ஆனால் அவர்கள் ஒரு மனித சேனை இல்லாமல் இதைச் செய்து மக்களை வெறுமனே சிதறடித்தனர். ஆதியாகமம் 14:1-24 இல், ஆபிரகாம் தேவனுடைய உதவியுடன் போராடினான், ஆனால் ஆபிரகாமின் எதிரிகளை அழிக்கும்படி தேவன் கட்டளையிடவில்லை. யாத்திராகமம் 12:12 இல், எகிப்தின் வாதைகளின் போது தேவன் எகிப்தியருக்கும் அவர்களுடைய தேவர்களுக்கும் எதிராக யுத்தம் செய்தார் என்று அறிகிறோம். ஆனால் இஸ்ரவேல் செயலற்றதாக இருந்தது, தேவன் ஒவ்வொரு எகிப்தியரையும் கொல்லவில்லை. யாத்திராகமம் 14 இல், செங்கடலில், இஸ்ரவேல் போர் அமைப்பில் கீழ்ப்படிதலுடன் தேவனைப் பின்பற்றியது, ஆனால் எகிப்தின் சேனையை அழித்தவர் தேவன் ஆவார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யோசுவாவின் நாட்களுக்குப் பிறகும் இதேபோன்ற வகைகள் தோன்றுகின்றன. சாமுவேலின் புத்தகம் விளக்குகிறபடி, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட உதவியால் இஸ்ரவேலின் எதிரிகள் பலருடன் தாவீது போரிட்டார். ஆனால் தேவன் தம்முடைய எதிரிகள் அனைவரையும் முழுமையான அழிவுக்கு அர்ப்பணிக்கவில்லை. தாவீதினுடைய ராஜ வம்சத்தின் அநேக தலைமுறைகளைக் குறித்ததிலும் இதுவே உண்மையாக இருந்ததாக இராஜாக்களின் புத்தகம் சுட்டிக்காட்டுகிறது. இஸ்ரவேலினுடைய நாடுகடத்தலின் முடிவு நிகரற்ற, அற்புத தெய்வீக தலையீட்டின் மூலம் போருடன் சம்பந்தமாக வெளிப்படும் என்று இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் முன்னறிவித்தனர்.

நாம் பார்க்கிறபடி, தீமையுடனான தேவனுடைய தொடர்ச்சியான போராட்டம் ஐந்தாகமத்திலும் பழைய ஏற்பாடு முழுவதிலும் பல்வேறு வழிகளில் வெளிப்பட்டது. யோசுவாவின் வெற்றி எல்லா போர்களுக்கும் விதிமுறை அல்ல என்ற உண்மையை இது நமக்கு எச்சரிக்கிறது. ஆரம்ப கால வாசகர் யோசுவாவிடமிருந்து தங்கள் நாளில் போரைப் பற்றிய பல பாடங்களைக் கற்றுக்கொள்ள முடிந்தது என்பது உண்மைதான். ஆனால் அந்த வெற்றியே அசாதாரணமான நியாயத்தீர்ப்பின் காலமாக இருந்தது. மற்ற பல போர்களைப் போலல்லாமல், கானானியர்கள் ராகாப் போன்ற அரிதான விதிவிலக்குகளைத் தவிர முழுமையான அழிவுக்கு முற்றிலும் தகுதியானவர்கள் என்று தேவன் அந்த நேரத்தில் தீர்மானித்தார்.

> கானானியரின் பாவம் காலப்போக்கில் குறிப்பாக கொடூரமானதாக படிப்படியாக வளர்ந்தது. ஆதியாகமம் புத்தகத்தில் 15 ஆம் அதிகாரத்தில் ஒரு குறிப்பு உள்ளது, எமோரியர்களின் பாவம் அதன் முழு அளவை எட்டுகிறது என்பதை நாம் வாசிக்கிறோம். அதுவரை தேவனுடைய ஜனங்கள் தேசத்தை உடைமையாக்கிக் கொள்வார்கள். எனவே, கானானியர் தேசம் வீழ்ச்சியடைவதை தேவன் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்றும், அவர்களின் வீழ்ச்சி ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடையும்போது அவருடைய நீதி ஊற்றப்படும் என்பதைப் புரிந்துகொள்கிறார் என்றும் வேதாகமத்தில் இந்த கருத்து உள்ளது. அவருடைய நீதியின் கருவி இஸ்ரவேல் தேசம், ஆனால் இஸ்ரவேல் தேசம் பெரிய தார்மீக நேர்மையைக் கொண்டிருந்ததால் இஸ்ரவேலை நீதியின் கருவியாக உபயோகிக்கவில்லை. அவர்கள் மிகச் சிறிய நாடு. யோசுவா வருவதற்கு முந்தின சந்ததியில் நாம் கண்டபடியே, அவர்கள் மகா பாவத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள், அவர்களுடைய ஜெயத்திலும் பாவமுண்டு. ஆனால் இந்த விஷயத்தின் உண்மை என்னவென்றால், தேவன், தனது கிருபையால், அந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேசத்தை தனக்கு அழைத்துள்ளார், மேலும் அந்த தேசத்தை மற்றொரு தேசத்தை அழித்து அகற்ற பயன்படுத்துகிறார், அங்கு வாழ அனுமதித்தால், அவர்களை கெடுத்து விடும். இஸ்ரவேல் தேசம் கானானுக்குள் செல்ல தேவன் அனுமதித்ததற்கும், அவர்கள் அங்கு வாழும் அனைவரையும் அழிக்க வேண்டியதற்கும் இது மற்றொரு காரணமாகும். தம்முடைய ஜனங்கள் மத பழக்கவழக்கங்களாலும், விக்கிரகாராதனையாலும், அங்கே வாழ்ந்த ஜனங்களின் பாவத்தாலும் கறைப்படுத்தப்படுவதை தேவன் விரும்பவில்லை, தம்முடைய தேசம் அவர்களைச் சுற்றியுள்ள தேசங்களைப் போல மாதிரியாக மாறுவதை அவர் விரும்பவில்லை. அவர்கள் தன்னைப் பின்பற்ற வேண்டும் என்றும், தன்னைத் தங்கள் ராஜாவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அதனால், இஸ்ரவேல் தேசம் உள்ளே சென்றது, நிச்சயமாக, அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட அந்த பணியை முடிக்கவில்லை. எனவே, யோசுவாவின் புத்தகத்தில் கூட, அதன் சலசலப்புகளை நாம் காண்கிறோம். நியாதிபதிகளின் புத்தகத்தில் இஸ்ரவேல் தேசம் பெருகிய முறையில் ஊழல் நிறைந்து, பாவம் மற்றும் வீழ்ச்சியின் சுழலில் மேலும் மேலும் ஈடுபடுகிறதை நாம் இங்கேயும் காண்கிறோம். தேவனுடன் உடன்படிக்கை உறவில் இருப்பவர்களின் குறைவான சிறப்பியல்பு மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள நாடுகளைப் போல, இஸ்ரவேலர் உள்ளே சென்று அங்கு வாழ்பவர்களை அகற்றும்படி கட்டளையிடுவதன் மூலம் தேவன் இதையெல்லாம் தவிர்க்க முயன்றார்.
>
> – Rev. கெவின் லாபி

**இஸ்ரவேல் ராஜாவின் எதிர்கால வெற்றி.** மூன்றாவதாக, யோசுவாவின் வெற்றி முழு உலகத்தையும் என்றென்றும் ஆட்சி செய்ய எதிர்பார்க்கப்பட்ட ராஜாவான இஸ்ரவேல் ராஜாவின் எதிர்கால வெற்றியை நோக்கி ஒரு படி மட்டுமே இருக்கிறது என்பதை நமது ஆசிரியர் ஐந்தாகமத்திலிருந்து அறிந்திருந்தார். ஆரம்பத்தில், கோத்திரப் பிதாவாகிய யாக்கோபு, ஆதியாகமம் 49:10 இல், யூதாவின் ராஜ குடும்பம் ”ஜனங்களின் கீழ்ப்படிதலை” பெறும் என்று அறிவித்தார். நியாயாதிபதிகளின் காலத்தில், யூதாவின் ராஜ வம்சத்தில் இந்த நம்பிக்கை நியாயாதிபதிகள் 1:1,2 இல் யூதா கோத்திரத்திற்கு வழங்கப்பட்ட முக்கிய பாத்திரத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. ராஜாக்களின் ஆட்சியின் போது, இந்த எதிர்பார்ப்பின் நிறைவேற்றம் குறிப்பாக சங்கீதம் 72 போன்ற பகுதிகளில் தாவீதின் வீட்டுடன் அடையாளம்

காணப்பட்டது. பல பகுதிகளில், இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் சிறையிருப்பானது எல்லா நாடுகளின் மீதும் தாவீதின் பெரிய குமாரனின் வெற்றியுடன் முடிவடையும் என்று கணித்தனர்.

ஆகையால், யோசுவாவின் நாளிலிருந்த இஸ்ரவேலரைப் போலவே, ஆரம்ப வாசகர்கள் தாங்கள் தங்களைப் பார்க்கிலும் மிகப் பெரிய ஒன்றின் பாகமாக இருந்ததை அறிந்திருந்தார்கள். இந்தக் காரணத்திற்காகவே, யோசுவா செய்த காரியத்திற்கு அவர்கள் வெறுமனே திரும்பிச் செல்லவில்லை. இஸ்ரவேலினுடைய ராஜாவின் எதிர்கால உலகளாவிய வெற்றியை நோக்கி தேவன் தொடர்ந்து வரலாற்றை நகர்த்தியதால், கானான் சுதந்தரிப்பில் என்ன நடந்தது என்பதை அவர்கள் தங்கள் நாளுக்குப் பொருத்த வேண்டியிருந்தது.

## கோத்திர மரபுரிமைகள்

இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களைப் பற்றிய தனது புத்தகத்தின் இரண்டாவது பிரிவில் தனது வாசகர்கள் இதேபோன்ற இறையியல் கண்ணோட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று நமது ஆசிரியர் எதிர்பார்த்தார்.

**ஆதிகால மனித ஆட்சி.** முதலாவதாக, கானானை இஸ்ரவேல் வைத்திருப்பது பூமியின் மீது மனித ஆதிக்கத்திற்கான தேவனுடைய ஆதிகால அழைப்பில் வேரூன்றியுள்ளது என்பதை மோசேயின் புத்தகங்களிலிருந்து அவர் புரிந்துகொண்டார். தம்முடைய உண்மையுள்ள உருவங்கள் பூமியை நிரப்பி ஆளும்போது, பூமி தம்முடைய ராஜ்யமாக மாற்றப்படும் என்று ஆதி காலங்களிலிருந்தே தேவன் நியமித்திருந்தார். இந்த அழைப்பு முதலில் ஆதியாகமம் 1:26-30 இல் அறிவிக்கப்பட்டது, பின்னர் ஆதியாகமம் 9:1-3 இல் உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவே, யோசுவாவின் புத்தகத்திலுள்ள இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களைப் பற்றிய பதிவு ஆரம்ப வாசகருக்கு தெளிவாக பொருத்தமாக இருந்தது. யோசுவாவின் நாளிலிருந்த இஸ்ரவேலரைப் போலவே, பூமியின் மீது ஆட்சி செலுத்தும்படி மனிதகுலத்திற்கு தேவன் கொடுத்த கட்டளையில் பங்குகொள்ளும்படி ஆரம்ப வாசகர்களும் அழைக்கப்பட்டனர்.

**இஸ்ரவேலின் விசேஷ சுதந்தரம்.** இரண்டாவதாக, இஸ்ரவேலின் விசேஷித்த சுதந்தரத்தை தேவன் ஸ்தாபித்திருக்கிறார் என்பதை ஐந்தாகமத் தொகுப்பிலிருந்து நம்முடைய ஆசிரியர் சரியாகப் புரிந்துகொண்டார். யோசுவாவின் நாளில் இஸ்ரவேலுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது இந்தச் சுதந்தரத்தின் முதல் நிறைவேற்றத்தைக் குறித்தது. உதாரணமாக, ஆதியாகமம் 15:18-21 இல், எகிப்தின் எல்லையிலிருந்து ஐபிராத்து நதி வரை நீண்டிருந்த அவருடைய சந்ததியினருக்கு தேவன் ஆபிரகாமுக்கு ஒரு சுதந்தரத்தை வாக்குறுதி அளித்தார். எனவே, ஐந்தாகமத்தின் சொற்களஞ்சியத்திலிருந்து பெறப்பட்ட, யோசுவாவின் புத்தகம் இஸ்ரவேலர் தங்கள் நிலத்தை சொந்தமாக்கிக் கொண்டதை எபிரெய வினைச்சொல்லானநாச்சால் (தமிழில்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (נָחַל ) - ”சுதந்தரித்தல்” என்று பொருள்படும் - மற்றும் நாச்சல்லா (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) என்னும் பெயர்ச்சொல் ( נַחֲלָה ) - அதாவது ”சுதந்தரம்” என்று பொருள்படும். இஸ்ரவேல் தேசம் தேவனிடமிருந்து வந்த ஒரு நீடித்த உடைமையாக இருந்தது என்பதை இந்த சொல் சுட்டிக்காட்டுகிறது.

இந்தக் காரணத்திற்காகவே, தங்களுடைய கோத்திர சுதந்தரங்களை பகிர்ந்தளிப்பதில் யோசுவா செய்தவற்றிலிருந்து ஆரம்ப வாசகர்கள் கற்றுக்கொள்ள நிறைய இருந்தது. நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேல் கோத்திரங்களுக்கிடையில் ஏற்பட்ட ஒற்றுமையின்மையும், மற்ற ஜனங்களிடையே ஏற்பட்ட தொல்லைகளும் யோசுவாவின் வெற்றிகளுக்கு இடையூறாக இருந்தன. ராஜாக்களின் ஆட்சியின் போது, இஸ்ரவேலின் ராஜாக்கள் இஸ்ரவேலின் நிலங்களை விரிவுபடுத்தினர், ஆனால் அவர்களும் பின்னடைவுகளையும் இழப்புகளையும் அனுபவித்தனர். பாபிலோனிய சிறையிருப்பின்போது, தேவனுடைய மக்களில் ஒரு சிறிய மீதியானோர் மட்டுமே அந்தத் தேசத்தில் மீந்திருந்தார்கள். மற்ற நாடுகளின் கொடுங்கோன்மையின் கீழ் மட்டுமே அவர்கள் அங்கு தங்கியிருந்தனர். ஆகையால், இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களை யோசுவா பகிர்ந்தளித்தது, ஆரம்பகால வாசகர் தங்கள் சொந்த நாளில் தேவனுடைய சேவையில் வாழ நாடுகையில் அவர்களுக்கு பெரும் உட்பார்வையை அளித்தது.

**இஸ்ரவேல் ராஜாவின் எதிர்கால சுதந்தரம்.** மூன்றாவதாக, கானானை இஸ்ரவேல் சுதந்தரித்தது, இஸ்ரவேலினுடைய ராஜாவின் எதிர்கால சுதந்தரத்திற்கு ஒரு படி மட்டுமே என்பதை நமது ஆசிரியர் அறிந்திருந்தார். குறிக்கப்பட்ட நேரத்தில், இஸ்ரவேலின் பெரிய மற்றும் நீதியுள்ள ராஜா முழு பூமியின் மீதும் ஆட்சி செலுத்துவதற்கான மனிதகுலத்தின் அசல் அழைப்பை நிறைவேற்றியதால், ஒவ்வொரு தேசத்தையும் சுதந்தரித்துக்கொள்வார். நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, ஆதியாகமம் 49:10, யூதாவின் ராஜ குமாரன் ஒருநாள் ”ஜனங்களின் கீழ்ப்படிதலை” பெறும் வரை ஆட்சி செய்வார் என்று அறிவிக்கிறது. கூடுதலாக, ஆதியாகமம் 17:4 ல், ”நீ திரளான ஜாதிகளுக்கு தகப்பனாயிருப்பாய்” என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதி அளித்தார். இதனால்தான் சங்கீதம் 2:8 இல், தேவன் தாவீதின் குடும்பத்தாரிடம், ”ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்” என்று சொன்னார். தாவீதின் பெரிய குமாரனின் தேசம் பூமியின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை பரவும் என்று இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் பல முறை அறிவித்தனர். ”உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது கிடைத்தது” என்று பவுல் ரோமர் 4:13 இல் இந்த பழைய ஏற்பாட்டுக் கண்ணோட்டங்களை சுருக்கமாகக் கூறினார். நமது ஆசிரியரின் அசல் வாசகர்களுக்கான தாக்கங்கள் தெளிவாக இருந்தன. யோசுவாவின் புத்தகத்தில் தாங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாசித்தவற்றை, இந்த உலகளாவிய சுதந்தரத்தின் இலக்கை நோக்கி தேவன் தம்முடைய ஜனங்களை அவர்களுடைய காலங்களில் வழிநடத்திச் சென்ற வழிகளுக்கு பொருத்திப் பிரயோகிக்க வேண்டியிருந்தது.

> அப்போஸ்தலனாகிய பவுல் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் முழு உலகத்தையும் உள்ளடக்கிய சுதந்தரத்தின் வாக்குறுதியை விளக்குகிறார் என்று ரோமர் 4 இல் பார்க்கிறோம். அது முதலில் நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை மத்தியதரைக் கடலின் கிழக்கு விளிம்பில் ஒரு தோட்டத்தின் ஒரு துண்டு மட்டுமே என்று நாம் நினைக்கிறோம். ஆனால் இது உண்மையில் பவுல் ஆபிரகாமிய உடன்படிக்கையை உலகளாவியதாக புரிந்துகொள்கிறார் என்பதாகும். ஆபிரகாமின் சந்ததியினர் மட்டுமல்ல, ஆபிரகாமின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள், அதாவது விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்கள், தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்புபவர்கள் உட்பட ஆபிரகாமின் பிள்ளைகளைப் பற்றி அவர் அடிக்கடி பேசுவார். உண்மையில், யூதர்கள் மட்டுமல்ல, கிறிஸ்துவை விசுவாசிக்கும் புறஜாதியாரும் ஆபிரகாமின் சந்ததியினரும், தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி புத்திரர்களுமாவார்கள். இதுவே கலாத்தியர் 3 இன் முடிவு என்று பவுல் வலியுறுத்துகிறார். ஆகவே, ஆபிரகாமின் பிள்ளைகள், விசுவாசத்தினால், முழு உலகத்தையும் சுதந்தரிப்பார்கள் என்று பவுல் ரோமர் 4 ல் கூறும்போது, அவர் உண்மையில் அதே புரிதலை நீட்டிக்கிறார்.
>
> – Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

## உடன்படிக்கை விசுவாசம்

நமது புத்தகத்தின் முதல் மற்றும் இரண்டாவது பிரிவுகளைப் போலவே, யோசுவாவின் ஆசிரியர் தனது அசல் வாசகர்கள் மூன்றாம் பிரிவான - உடன்படிக்கை விசுவாசத்திற்கான இஸ்ரவேலின் அழைப்பை பயன்படுத்தும்போது ஐந்தாகமத்திலிருந்து சில இறையியல் கண்ணோட்டங்களை மனதில் வைத்திருப்பார்கள் என்று எதிர்பார்த்தார்.

**ஆதிகால மனித விசுவாசம்.** முதலாவதாக, உடன்படிக்கை விசுவாசம் தேவன் மீது இருக்கும் மனித விசுவாசத்தின் முதன்மையான தேவையில் வேரூன்றியுள்ளது என்பதை நமது ஆசிரியர் ஐந்தாகமத்திலிருந்து புரிந்துகொண்டார். வெறுமென தேவனுடைய சாயல்களாக இருப்பது நம்மை உடன்படிக்கையின் மூலம் தேவனுடன் பிணைக்கிறது, இந்த பிணைப்பு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவருக்கு உண்மைப் பற்றுறுதியுடன் சேவை செய்வதைத் தேவைப்படுத்துகிறது. ஆதியாகமம் 1-3 மற்றும் ஓசியா 6:7 ஆகியவற்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி, ஆதாமில் மனிதகுலம் முழுவதுடனும் தேவனுடைய உடன்படிக்கைக்கு கீழ்ப்படிதல் தேவைப்பட்டது. நோவாவின் ஆதியாகமம் 6,9-ல் தேவனுடைய உடன்படிக்கை, எல்லா மனிதர்களும் உடன்படிக்கையின் மூலம் தேவனை சேவிக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்தியது. இது எல்லாக் காலங்களிலும் எல்லா ஜனங்களுக்கும் உண்மையாக இருப்பதால், யோசுவா அவருடைய நாளில் உடன்படிக்கை உண்மைப் பற்றுறுதிக்காக அழைப்பு விடுத்ததிலிருந்து ஆரம்ப வாசகர்களால் அதிகம் கற்றுக்கொள்ள முடிந்தது. அவர்கள், மற்ற எல்லா மனிதர்களையும் போலவே, தேவனுடைய உண்மைப் பற்றுறுதிமிக்க சேவைக்கு கடமைப்பட்டிருந்தனர்.

**இஸ்ரவேலின் விசேஷ உடன்படிக்கை விசுவாசம்.** இரண்டாவதாக, ஆரம்ப வாசகர் இஸ்ரவேலின் விசேஷித்த உடன்படிக்கை உண்மைப் பற்றுறுதியையும் அறிந்திருக்க வேண்டியிருந்தது. சுதந்தரிப்பின் காலத்தில், தேவனுடைய உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்கும்படி யோசுவா ஜனங்களுக்கு அறிவுரை கூறியதை நமது ஆசிரியர் கவனமாக கவனிக்கிறார். மக்கள் அவ்வாறு செய்வதாக உறுதிமொழி எடுத்தனர்.

ஆதியாகமம் 17-ல் ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையை அசல் வாசகர்கள் அறிந்திருப்பார்கள். இங்கே தேவன் தமக்கு முன்பாக குற்றமற்றவராக இருப்பதற்கான அர்ப்பணிப்பாக விருத்தசேதனத்தை எதிர்பார்த்தார். தேவன் மோசேயில் செய்த உடன்படிக்கையானது யாத்திராகமம் 19-24 மற்றும் உபாகமம் புத்தகத்தில் புதுப்பிக்கப்பட்டது. இஸ்ரவேல் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை தெளிவுபடுத்தியது. நமது புத்தகத்தின் மூன்றாம் பிரிவில், யோசுவா இந்த தேவைகளை பூர்த்தி செய்யாவிட்டால் இஸ்ரவேலுக்கு வரவிருக்கும் சோதனைகளின் மீது கவனம் செலுத்தினார், குறிப்பாக கள்ள தேவர்களை நிராகரிக்க வேண்டிய தேவையை வலியுறுத்தினார். அவர்கள் உண்மையற்றவர்களாக இருந்தால் தொல்லைகள், தோல்வி மற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து நாடுகடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை அவர் அவர்களுக்கு முன்னால் வைத்தார்.

புத்தகத்தின் அசல் வாசகர்களின் காலத்தில், இந்த சோதனைகள் ஏற்கனவே வெளிவரத் தொடங்கின. நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேல் தொல்லைகளின் சுழற்சிகளில் நுழைந்தது. ராஜாக்களின் ஆட்சியின் போது, ஜனங்களும் அவர்களுடைய ராஜாக்களும் திரும்பத் திரும்ப விக்கிரகாராதனை செய்ததன் காரணமாக இஸ்ரவேல் மீது அதிகமான நியாயத்தீர்ப்புகள் வந்தன. பாபிலோனிய சிறையிருப்பின்போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை இழக்க நேரிடும் என்ற பயம் பயங்கரமான உண்மையாயிற்று. ஆகையால், அசல் வாசகர்கள் தங்கள் சொந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாளில் எதிர்கொள்ளும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் வெளிச்சத்தில் இஸ்ரவேலருக்கு யோசுவாவின் எச்சரிக்கைகளை கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது.

**இஸ்ரவேலின் ராஜாவுடன் எதிர்கால உடன்படிக்கை.** மூன்றாவதாக, யோசுவாவின் நாளில் நடந்தது தேவன் இஸ்ரவேலின் ராஜாவுடன் எதிர்கால உடன்படிக்கை செய்வார் என்று எதிர்பார்த்தது. யூதாவின் ராஜா ஒருவர் ஆளுகை செய்ய தேவன் கட்டளையிட்டார் என்பதை ஆதியாகமம் 49:10 குறிக்கிறது என்பதை நாம் அறிவோம். மேலும் ஆதியாகமம் 17:6 இஸ்ரவேலுக்கு ஒரு ராஜா இருப்பார் என்று குறிப்பிடுகிறது. நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலுக்கு முறையான ராஜா இல்லை என்றாலும், நியாயாதிபதிகள் 21:25 மற்றும் 1 சாமுவேல் 2:10-ல் உள்ள அன்னாளின் பாடலின் முடிவு போன்ற பகுதிகள், இந்த காலகட்டத்தில் கூட, விசுவாசிகள் இஸ்ரவேலின் ராஜ குடும்பத்தின் மூலம் விடுதலையை எதிர்பார்த்தார்கள் என்பதைக் குறிக்கிறது.

யோசுவாவின் புத்தகம் இஸ்ரவேலின் முடியாட்சியின் போது அல்லது பாபிலோனிய நாடுகடத்தலின் போது எழுதப்பட்டிருந்தால், அசல் வாசகர்கள் தாவீதுடன் தேவனுடைய வம்ச உடன்படிக்கையுடன் உடன்படிக்கை விசுவாசத்திற்கான யோசுவாவின் அழைப்பை தொடர்புபடுத்த வேண்டியிருந்தது. 2 சாமுவேல் 7 மற்றும் சங்கீதம் 89, 132 போன்ற பகுதிகளில், தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கை விசுவாசத்தின் அவசியத்தை எவ்வாறு மையப்படுத்தியது என்பதை நாம் காண்கிறோம். தாவீதின் ராஜ வம்சம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டியிருந்தது, ஏனென்றால் அவர்கள் தேவனுக்கு முன்பாக இஸ்ரவேல் மக்களை பிரதிநிதித்துவம் செய்தனர்.

கூடுதலாக, ஏசாயா 53:11 இன் தீர்க்கதரிசனத்தின்படி, இஸ்ரவேலின் பரிபூரண நீதியுள்ள ராஜாவான "தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். இந்த பெரிய ராஜா வேறு யாருமல்ல, எரேமியா 31 இல் முன்னறிவிக்கப்பட்ட புதிய உடன்படிக்கையைக் கொண்டு வந்த கிறிஸ்து இயேசுவே ஆவார். கிறிஸ்து திரும்பி வந்து எல்லாவற்றையும் புதிதாக்கும்போது இந்த உடன்படிக்கை அதன் முழுமையில் வரும். அசல் வாசகர்கள் தங்கள் சொந்த காலங்களுக்கு உடன்படிக்கை விசுவாசத்திற்கான யோசுவாவின் அழைப்பைப் பயன்படுத்தியதால், தேவன் தம்முடைய மக்களுடன் செய்த உடன்படிக்கைகளின் இந்த முன்னேற்றங்களில் அவர்கள் எங்கு நிற்கிறார்கள் என்ற வெளிச்சத்தில் அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டியிருந்தது.

ஆகையால், யோசுவாவின் புத்தகத்தின் மூல அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள நாடுகையில், யோசுவாவின் நாளில் என்ன நடந்தது என்பதை அவருடைய வாசகர் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நம் ஆசிரியர் விரும்பினார் என்பதை நாம் எப்போதும் மனதில் வைக்க வேண்டும். ஆனால்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெற்றிகரமான சுதந்தரித்தல், கோத்திர சுதந்தரம் மற்றும் உடன்படிக்கை விசுவாசத்திற்கான அழைப்பை தங்கள் சொந்த காலத்திற்கும் சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான வழிகளில் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

இதுவரை யோசுவாவின் புத்தகத்தின் அறிமுகத்தில் அதன் ஆசிரியர் மற்றும் தேதி, அதன் வடிவமைப்பு மற்றும் அசல் நோக்கம் ஆகியவற்றைப் பார்த்தோம். இப்போது இந்த பாடத்தின் மூன்றாவது முக்கிய தலைப்பை அறிமுகப்படுத்தும் நிலையில் நாம் இருக்கிறோம்: கிறிஸ்தவ பயன்பாடு நாம் கிறிஸ்துவைப் பின்பற்றும்போது யோசுவாவின் புத்தகம் நம் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்க வேண்டும்?

# கிறிஸ்தவ பயன்பாடு

எபிரெய மொழியில், "இயேசு" என்ற பெயர் "யோசுவா" ஆகும். இந்த எளிய உண்மை, ஒரு கிறிஸ்தவ நோக்குநிலையிலிருந்து, யோசுவாவின் நாளில் தொடங்கியதை இயேசு நிறைவேற்றுகிறார் அல்லது முடிக்கிறார் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. பல விஷயங்களில், யோசுவாவின் புத்தகத்தை நம் வாழ்க்கையில் பொருத்துவது கிறிஸ்துவில் இந்த நிறைவேற்றத்திலிருந்து பாய்கிறது. யோசுவாவின் புத்தகம் மற்றும் இயேசுவிற்கு இடையிலான இந்த தொடர்பை நாம் எவ்வளவு அதிகமாக புரிந்துகொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நம்மீது இந்த புத்தகம் ஏற்படுத்தும் தாக்கத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். நாம் பார்த்தபடி, நமது புத்தகத்தின் ஆசிரியர் இஸ்ரவேலின் வெற்றிகரமான சுதந்தரித்தல், கோத்திர சுதந்தரம் மற்றும் இஸ்ரவேலின் பிற்கால தலைமுறைகளை வழிநடத்த யோசுவாவின் தலைமையின் கீழ் உடன்படிக்கை விசுவாசம் ஆகியன பற்றி எழுதினார். ஆனால் எதிர்காலத்தில், இஸ்ரவேலின் ஒரு பெரிய ராஜா வருவார் என்பதையும், யோசுவாவின் புத்தகத்தில் சுட்டிக்காட்டப்பட்ட அனைத்து இலக்குகளையும் அவர் நிறைவேற்றுவார் என்பதையும் நமது ஆசிரியர் புரிந்துகொண்டார்.

> யோசுவா வெற்றிகரமான போர்களை வழிநடத்திக் கொண்டிருந்தபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைக் கைப்பற்ற ஜனத்தை வழிநடத்திக் கொண்டிருந்தார். அவர்கள் தவறி பாவம் செய்தபோது தேசத்தின் சார்பாக பரிந்து பேசினார். அவர் தேசத்திற்காக பரிந்து பேசினார், பின்னர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை வாக்குப்பண்ணப்பட்ட பூமியை நோக்கி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வழிநடத்தினார். இவை அனைத்தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கற்பனை சித்திரமாகும். எபிரெயர் 4 ல் எழுதப்பட்டுள்ளபடி, கிறிஸ்து தேவனுடைய மக்களை அவர்களின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சுதந்தரத்திற்குள் வழிநடத்தினார். அவர் தேவனுடைய தேசத்தின் சார்பாக பரிந்து பேசுகிறார், தேசத்திற்காக ஜெபிக்கிறார், தேசத்திற்காக பரிந்து பேசுகிறார், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையான புதிய ஏற்பாட்டு தேசத்திற்காக பிரதான ஆசாரியரின் வேலையைச் செய்கிறார். இவை அனைத்தும் புதிய ஏற்பாட்டின் ஒரு சித்தரிப்புப் படமாகும்.
>
> –Rev. ஹென்றிக் துர்கானிக், மொழிபெயர்ப்பு

பொதுவாகச் சொன்னால், இஸ்ரவேலின் மேசியாவாக, இயேசு இந்த இலக்குகளை இரண்டு முக்கிய வழிகளில் நிறைவேற்றுகிறார். முதலாவதாக, யோசுவாவின் கீழ் இஸ்ரவேல் நிறைவேற்றிய நல்ல காரியங்களான கானானைக் கைப்பற்றுதல், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் ஆரம்ப சுதந்தரம், மற்றும் தேவனுக்கு இஸ்ரவேலின் விசுவாசமான உடன்படிக்கை சேவை போன்றவற்றுடன் நாம் இயேசுவை ஒப்பிடும்போது இயேசு எவ்வாறு இறுதியில் ஒவ்வொரு இலக்கையும் நிறைவேற்றுகிறார் என்பதை நாம் காணலாம். இரண்டாவதாக, இயேசுவின் சாதனைகளை இஸ்ரவேலின் தோல்விகளான கட்டளையிட்டபடி அனைத்து கானானியரையும் அழிக்க இயலாமை, அவர்களின் கோத்திர சுதந்தரங்களைப் பற்றி அவர்கள் சண்டையிடுதல் மற்றும் வாதிடுதல் மற்றும் தேவனுடைய உடன்படிக்கைக்கு விசுவாசமாக இருக்கத் தவறுதல் ஆகியவற்றை நாம் வேறுபடுத்திப் பார்க்கும்போது இயேசு உண்மையில் இஸ்ரவேலின் அனைத்து தோல்விகளையும் மாற்றியமைக்கிறார் என்பதை நாம் காணலாம். இந்த வழிவகைகளின் மூலம், இயேசு முழு பூமியின் மீதும் வெற்றிகரமான சுதந்தரிப்பை நடத்துகிறார், அவர் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்கிறார், மேலும் அவர் உலகெங்கிலும் உடன்படிக்கை விசுவாசத்தை ஸ்தாபிக்கிறார்.

ஆனால் இன்று யோசுவாவின் புத்தகத்தை எவ்வாறு கிறிஸ்தவ வாழ்வில் நடைமுறைப் படுத்துவது என்பதைப் புரிந்து கொள்ள, நாம் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும்: இந்த இலக்குகளின் மேசியா நிறைவேற்றம் காலப்போக்கில் வெளிப்படும் என்று தேவன் தீர்மானித்தார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில், முதல் நூற்றாண்டு பாலஸ்தீனத்தில் பல யூதர்கள் மேசியா உலகளாவிய வெற்றியை வெல்வார், உலகத்தை சுதந்தரிப்பார், உடன்படிக்கை விசுவாசத்தை எல்லா இடங்களிலும் பரப்புவார் என்று சரியாக நம்பினர். ஆனால் அவர் இதை விரைவாகவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பேரழிவாகவும் செய்வார் என்றும் இந்த யூதர்கள் நம்பினர். இதற்கு நேர்மாறாக, இயேசுவும் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் இயேசு நிறுவிய ராஜ்யம் படிப்படியாக மூன்று ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கட்டங்களில் வெளிப்படும் என்று மீண்டும் மீண்டும் விளக்கினர்.

ராஜ்யத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் தனித்தனியாகப் பார்ப்பதன் மூலம் யோசுவாவின் கிறிஸ்தவ பயன்பாட்டை நோக்கி ஒரு நோக்குநிலையைப் பெறுவோம்.

## ராஜ்யத்தின் தொடக்கம்

முதலாவதாக, யோசுவாவின் புஸ்தகத்தில் நிறுவப்பட்ட எதிர்பார்ப்புகளை கிறிஸ்து எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை சிந்திப்போம், இயேசு தம்முடைய ராஜ்யத்தின் தொடக்கத்தில் என்ன சாதித்தார் என்பதை ஆராய்வோம். இரண்டாவதாக, ராஜ்யத்தினுடைய தொடர்ச்சியின் போது யோசுவாவின் புத்தகத்தை அவர் எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்பதை ஆராய்வோம். மூன்றாவதாக, இயேசு தம்முடைய மகிமையான வருகையின் போது ராஜ்யத்தின் முடிவின் போது என்ன சாதிப்பார் என்பதை ஆராய்வோம். முதலாவதாக, கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்கத்தைக் கவனிக்கவும்.

### வெற்றிகரமான சுதந்தரித்தல்

இயேசு தேவனுடைய ராஜ்யத்தைத் தொடங்கி வைத்தது, அவருடைய மகிமையான உலகளாவிய வெற்றிகரமான வெற்றியின் ஆரம்ப கட்டமாக இருந்தது என்று புதிய ஏற்பாடு பல இடங்களில் போதிக்கிறது. ஆனால் யோசுவாவின் புத்தகத்தில் இஸ்ரவேலின் வெற்றிகரமான சுதந்தரிப்பை இயேசுவின் முதல் வருகையுடன் ஒப்பிடும்போது, ஒரு தனித்துவமான வித்தியாசத்தை நாம் காண்கிறோம். யோசுவாவைப் போல பட்டயத்தை எடுப்பதற்குப் பதிலாக, இயேசு இரண்டு விதமான உத்தியைப் பின்பற்றினார்: அவர் சாத்தானையும் அவனுடைய பிசாசுகளையும் இறுதியில் தோற்கடிக்கத் தொடங்கினார். மேலும் அவர் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைப் பற்றி எச்சரிப்பதன் மூலமும், தேவனுடைய இரக்கத்தை அவர்களுக்கு வழங்குவதன் மூலமும் மனிதர்களுக்கு நற்செய்தியை, அல்லது ராஜ்யத்தின் "நற்செய்தியை" அறிவித்தார்.

யோவான் 12:31,32-ல், இயேசு இந்த இரட்டை உத்தியை விவரித்தார்: "இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்." இதனால்தான், கொலோசெயர் 2:15 இல், "துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெற்றிசிறந்தார்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவின் மரணத்தை விவரித்தார். அதனால்தான், எபேசியர் 4:8-ல், "[கிறிஸ்து] உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்" என்றும் பவுல் சொன்னார்.

## கோத்திர மரபுரிமைகள்

கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்க விழா தேவனுடைய மக்களுக்கு உலகளாவிய சுதந்தரத்தின் நம்பிக்கையை எவ்வாறு நிறைவேற்றியது என்பதற்கான இரண்டு கண்ணோட்டங்களையும் புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. ஒருபுறம், "[தேவன்] இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்" என்று எபிரெயர் 1:2 விளக்குகிறது. மத்தேயு 28:18 இல், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னபோது, அவர் இந்த சுதந்தரத்தைப் பெற்றார் என்று கூறினார்.

மறுபுறம், இயேசு தனது திருச்சபையின் மீது பரிசுத்த ஆவியை ஊற்றியபோது தனது உலகளாவிய சுதந்தரத்தின் முன்னறிவிப்பை விநியோகித்தார் என்பதையும் புதிய ஏற்பாடு வலியுறுத்துகிறது. ஏசாயா 44:3,4 போன்ற தீர்க்கதரிசனங்கள் குறிப்பிடுவது போல, பரிசுத்த ஆவியின் பொழிவு ஒரு நாள் முழு சிருஷ்டிப்பையும் புதுப்பிக்கும். எனவே, எபேசியர் 1:14 இல், பவுல் பரிசுத்த ஆவியானவர் திருச்சபையின் மீது ஊற்றப்பட்டதைப் பற்றி "நமது சுதந்தரத்தின் உத்தரவாதம்" என்று பேசினார். மேலும், 2 கொரிந்தியர் 1:22 மற்றும் 5:5 இல் அவர் கூறியது போல, ஆவியானவர் வரவிருக்கும் விஷயங்களுக்கு "ஒரு அச்சாரமும்" - புதிய வானத்திலும் புதிய பூமியிலும் நமது எதிர்கால சுதந்தரமும் ஆவார்.

## உடன்படிக்கை விசுவாசம்

கூடுதலாக, கிறிஸ்து புது உடன்படிக்கை யுகத்தை ஆரம்பித்து வைத்தபோது உடன்படிக்கை விசுவாசத்தை வலியுறுத்தியது என்று புதிய ஏற்பாடு அறிவிக்கிறது. எரேமியா 31 இல் ஒரு புதிய உடன்படிக்கையின் தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிட்டு, "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது" என்று லூக்கா 22:20 இல் இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். உண்மையான விசுவாசிகளுக்கான இறுதி பிராயச்சித்தமாக இயேசு சிலுவையில் தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பை சுமந்தார் என்பதை புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தெளிவுபடுத்தினர்.

ஆனால் இயேசு புதிய உடன்படிக்கையின் நிறைவை தம்முடைய முதல் வருகையில் பூமிக்கு கொண்டு வரவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, நாம் முழுமையாக பரிசுத்தமாக்கப்படாததால்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் உண்மையான விசுவாசிகளையும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க அறிவுறுத்தினர். இதற்கும் மேலாக, 2 கொரிந்தியர் 11:26 மற்றும் கலாத்தியர் 2:4 ஆகியவற்றில் பவுல் அவர்களிடம் நம்மிடையே "கள்ள சகோதரர்கள்" உள்ளனர் என்றார். உடன்படிக்கை விசுவாசத்திற்கான அழைப்பு இன்னும் தொடர்கிறது, ஏனென்றால் புது உடன்படிக்கை முழுமையாக நிறைவேறும் வரை நாம் காத்திருக்கிறோம்.

# ராஜ்யத்தின் தொடர்ச்சி

பல விஷயங்களில், ராஜ்யத்தின் தொடக்கத்தை பொறுத்தவரை யோசுவாவின் புத்தகத்தின் கிறிஸ்தவ பயன்பாடுகள் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடர்ச்சியைப் பற்றி புதிய ஏற்பாடு கற்பிப்பதற்கு இணையாக உள்ளன.

## வெற்றிகரமான சுதந்தரித்தல்

புதிய ஏற்பாடு இயேசுவினுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியை அவரது வெற்றிகரமான சுதந்தரிப்பு திருச்சபையில் செயல்படும் அவரது ஆவியானவரின் மூலம் உலகம் முழுவதும் விரிவடைகிறது என்று விவரிக்கிறது. 1 கொரிந்தியர் 15:25 இல் "[கிறிஸ்து] எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது" என்று பவுல் கூறினார். ஆனால் சபையாக நமது ஊழியத்தில், இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் செய்ததைப் போல நாம் சரீரப்பிரகாரமான ஆயுதங்களை எடுப்பதில்லை. அதற்கு பதிலாக, இயேசு தனது முதல் வருகையில் நிறுவிய இரட்டை உத்தியுடன் தொடர்கிறோம்.

ஒருபுறம், உலகின் பகுதிகளில் சாத்தான் மற்றும் தீய ஆவிகளின் தோற்கடிப்பை நாம் மேலும் அதிகரிக்கிறோம். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:12). மறுபுறம், வரவிருக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து மனிதர்களை எச்சரித்து, மன்னிப்பின் இரக்கத்தையும் நித்திய ஜீவனையும் அவர்களுக்கு வழங்கும் நற்செய்தியை அறிவிப்பதன் மூலம் நாம் இன்று உலகில் கிறிஸ்துவை பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். "நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்" என்று 2 கொரிந்தியர் 5:20 கூறுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## கோத்திர மரபுரிமைகள்

திருச்சபை வரலாற்றில் அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சி முழுவதிலும் தேவனுடைய ஜனங்களுக்கான உலகளாவிய சுதந்தரத்தைப் பற்றிய நமது எதிர்பார்ப்பு மேலும் அதிகரிக்கிறது என்பதையும் நாம் காண்கிறோம். இயேசு எல்லாவற்றின் மீதும் தேவனால் நியமிக்கப்பட்ட வாரிசு என்ற உண்மையானது, எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் அவரை கர்த்தராக ஏற்றுக்கொள்வதால் மேலும் மேலும் தெளிவாகிவிட்டது. பரிசுத்த ஆவியானவரின் வரத்தை உலகெங்கிலும் மேலும் மேலும் மக்களுக்கு கிறிஸ்து தொடர்ந்து விநியோகிக்கிறார். "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்" என்று கலாத்தியர் 3:29 போன்ற பகுதிகள் நமக்குச் சொல்கின்றன. ரோமர் 8:16,17 இன் வார்த்தைகளில், " தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" என்று வாசிக்கிறோம்.

## உடன்படிக்கை விசுவாசம்

பல வழிகளில், கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது உடன்படிக்கை விசுவாசத்திற்கு யோசுவாவின் வலியுறுத்தல் எவ்வாறு உண்மையாக இருக்கிறது என்பதையும் நாம் காணலாம். திருச்சபை உலகம் முழுவதும் பரவுகையில், புது உடன்படிக்கையினுடைய இரத்தத்தின் முழு பாவநிவர்த்தி இரட்சிக்கும் விசுவாசமுள்ள அனைவரின் பாவங்களையும் இன்னும் மூடுகிறது. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் நித்திய நியாயத்தீர்ப்பிலிருந்து முற்றிலும் விடுபட விதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் காலங்காலமாக திருச்சபை உடன்படிக்கை விசுவாசத்திற்கு அழைக்கப்படுவது இன்னும் முக்கியமாகும்.

ஒருபுறம், உண்மையான விசுவாசிகள் இன்னும் தேவ பக்தியில் வளர வேண்டும். எபிரெயர் 12:14 போன்ற பகுதிகளின் எச்சரிக்கைகளை அவர்கள் இருதயத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று இந்த பகுதி கூறுகிறது. மறுபக்கத்தில், நம்மிடையே இன்னும் இருக்கும் கள்ள சகோதரர்கள் எச்சரிக்கப்பட வேண்டும், அப்போதுதான் அவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவார்கள். "நாம் வேண்டுமென்றே பாவம் செய்தால் ... இனி பாவங்களுக்கான பலி இல்லை, ஆனால் நியாயத்தீர்ப்பின் பயங்கரமான எதிர்பார்ப்பும், [தேவனுடைய] சத்துருக்களைப் பட்சிக்கும் அக்கினியின் உக்கிரமும்" தான் இருக்கும் என்று எபிரெயர் 10:26,27 கூறுகிறது.

> உடன்படிக்கை விசுவாசம் மற்றும் புதுப்பித்தல் என்ற கருப்பொருள் யோசுவாவின் புத்தகத்தில் முக்கியமான தலைப்புகளில் ஒன்றாகும். யோசுவாவின் புத்தகத்தில்

> யோசுவா மக்களை வழிநடத்திய ஒவ்வொரு போருக்குப் பிறகும், உடன்படிக்கையின் சூழலில் உடன்படிக்கையையும் கர்த்தருக்கு விசுவாசத்தையும் புதுப்பிப்பதற்கான ஒரு விழா இருப்பதை நாம் காண்கிறோம்... இந்த கருப்பொருள் கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகவும் முக்கியமானது, ஏனென்றால் நாமும் கர்த்தருடன் ஒரு உடன்படிக்கையில் இருக்கிறோம். அதாவது கிறிஸ்து தம்முடைய இரத்தத்தால் நம்முடன் செய்த புதிய உடன்படிக்கையில் இருக்கிறோம். உடன்படிக்கை விசுவாசத்தின் கருப்பொருள் கர்த்தர் செய்த ஏதோ ஒன்றாகும், கர்த்தரின் கருணை மற்றும் கிருபையுடன் இது தொடர்புடையது. ஆகவே, கர்த்தர் இஸ்ரவேலருக்கு இரக்கம் காட்டி, அவர்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியபோது, உடன்படிக்கைக்குள் கர்த்தருக்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பதன் முக்கியத்துவத்தை யோசுவா மக்களுக்கு நினைவூட்டுவது முக்கியம். அதே விஷயம் நமக்கும் பொருந்தும். கர்த்தர் கிறிஸ்துவுக்குள் நமக்குக் கருணையைக் காட்டினார், அவருடைய கிருபையின் கிரியையினாலே நாம் இரட்சிப்பைப் பெறுகிறோம். இதன் விளைவாக, நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும், இது நமது கீழ்ப்படிதலில், அதாவது கர்த்தரின் கட்டளைகளுக்கும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிவதில் காட்டப்பட வேண்டும். கீழ்ப்படிதல், விசுவாசம் மற்றும் விசுவாச வாழ்க்கையை நாம் வாழும்போது, ஆரம்பத்திலிருந்தே கர்த்தர் நமக்காகச் செய்தவற்றுக்கு நமது நன்றியைத் தெரிவிக்கிறோம். நமக்கு ஆசீர்வாதங்களையும் தயாளங்களையும் வழங்குவதன் மூலம் உடன்படிக்கையில் முன்முயற்சி எடுப்பவர் கர்த்தர் ஆவார், உடன்படிக்கையின் சூழலில் நமது கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தின் மூலம் இந்த ஆசீர்வாதங்களுக்கும் தயாளங்களுக்கும் நாம் பதிலளிக்கிறோம்.
>
> – Rev. ஷெரிஃப் ஜெண்டி, மொழிபெயர்ப்பு

## ராஜ்யத்தின் நிறைவு

யோசுவாவின் புத்தகத்தின் கிறிஸ்தவ பயன்பாடு எவ்வாறு தோன்றுகிறது என்பதைக் கண்ட பிறகு, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்கம் மற்றும் தொடர்ச்சியில் நாம் சுருக்கமாக ராஜ்யத்தின் முடிவுக்கு திரும்ப வேண்டும். யோசுவாவின் புத்தகத்தின் வெளிச்சத்தில் கிறிஸ்துவின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எதிர்காலத்திலும் இறுதி நிறைவேற்றத்திலும் நம்முடைய நம்பிக்கையை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

## வெற்றிகரமான சுதந்தரித்தல்

கேள்விக்கிடமின்றி, கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் முடிவடைதல் அவரது உலகளாவிய வெற்றிகரமான சுதந்தரிப்பின் மகத்தான முடிவாக இருக்கும் என்று புதிய ஏற்பாடு சுட்டிக்காட்டுகிறது. அவர் சாத்தானையும் தீய ஆவிகளையும் தோற்கடிப்பார். இயேசு மகிமையில் திரும்பும்போது, அவிசுவாசிகளுக்கு தேவனுடைய இரக்கத்தின் காலம் முடிவடையும். அந்தச் சமயத்தில், யோசுவாவின் நாளில் கானானுக்கு எதிராக தேவன் கொடுத்த நியாயத்தீர்ப்பு, தேவனுடைய ஒவ்வொரு மனித எதிரிக்கும் எதிராக இயேசு கொண்டுவரப்போகும் நியாயத்தீர்ப்போடு ஒப்பிடுகையில் சிறியதாகத் தோன்றும். "பரலோகத்திலுள்ள சேனைகள் அவருக்குப் பின்சென்றார்கள். புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்" என்று வெளிப்படுத்தின விசேஷம் 19:14,15 இல் நாம் வாசிக்கிறோம்.

## கோத்திர மரபுரிமைகள்

நிச்சயமாக, கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தின் முடிவில் திரும்பும்போது, அவருடைய உலகளாவிய சுதந்தரம்முழுமையாக உணரப்படும். வெளிப்படுத்தின விசேஷம் 11:15 இல் "அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின" என்று நாம் வாசிக்கிறோம். இந்த உலகளாவிய ராஜ்யம் கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவருக்கும் விநியோகிக்கப்படும். "அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுவார் என்று மத்தேயு 25:34 கூறுகிறது.

## உடன்படிக்கை விசுவாசம்

கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் முடிவில் மட்டுமே தேவனுடைய மக்களை உடன்படிக்கை விசுவாசத்திற்கு அழைக்கும் எச்சரிக்கைகள் முடிவடையும். கிறிஸ்து திரும்பும்போது, இரட்சிப்பின் விசுவாசத்தில் அவரிடம் வராதவர்கள் தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பின் கீழ் வருவார்கள். உண்மையான விசுவாசிகள் அனைவரும் புதிய சிருஷ்டிப்புக்குள் நுழைவார்கள், அங்கு புது உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள் முழுமையாகப் பெறப்படும். "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்” என்று வெளிப்படுத்தின விசேஷம் 22:3 நமக்கு சொல்கிறது.

இதன் விளைவாக, கிறிஸ்து தனது ராஜ்யத்தின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் நிறைவு ஆகியவற்றில் யோசுவாவின் கருப்பொருள்களை எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்பதை நினைவில் கொள்ள புதிய ஏற்பாடு நம்மை அழைக்கிறது. நாம் அவ்வாறு செய்யும்போது, யோசுவாவின் நாளில் இஸ்ரவேலின் வெற்றி, சுதந்தரம் மற்றும் உடன்படிக்கை விசுவாசம் ஆகியவை கிறிஸ்து தனது முதல் வருகையில் ஸ்தாபித்ததைப் பற்றிய நமது விழிப்புணர்வை வளப்படுத்துகின்றன. நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் நாம் எவ்வாறு தேவனுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதை அவை நமக்குக் கற்பிக்கின்றன. ஜெயம் நிறைவடையும் போது, புதிய சிருஷ்டிப்பின் சுதந்தரம் நம்முடையதாக இருக்கும், கிறிஸ்துவில் தேவனுடைய விசுவாசமான உடன்படிக்கை மக்களாக நாம் நியாயநிரூபணம் செய்யப்படும் போது அவை வரலாற்றின் மகத்தான முடிவை நோக்கி நம்மை சுட்டிக்காட்டுகின்றன.

# முடிவுரை

”யோசுவா ஓர் அறிமுகம்” என்கிற பாடத்தில் மூன்று முக்கியமான விஷயங்களை முன்வைத்தோம். முதலாவதாக, இந்த விஷயங்களில் பாரம்பரிய, விமர்சன மற்றும் சுவிசேஷ கண்ணோட்டங்கள் உட்பட புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதியைத் தொட்டோம். இரண்டாவதாக, யோசுவாவின் வடிவமைப்பையும் நோக்கத்தையும் ஆராய்ந்தோம், புத்தகத்தின் உள்ளடக்கம் மற்றும் கட்டமைப்பு, அத்துடன் அதன் அசல் அர்த்தத்தையும் கருத்தில் கொண்டோம். மூன்றாவதாக, கிறிஸ்து, தேவனுடைய மகிமையான ராஜ்யத்தின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் நிறைவு, யோசுவாவில் நிறுவப்பட்ட எதிர்பார்ப்புகளை எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்பதைப் பார்ப்பதன் மூலம் புத்தகத்திலிருந்து பெறக்கூடிய சில கிறிஸ்தவ பயன்பாடுகளை நாம் ஆராய்ந்தோம்.

யோசுவாவின் புத்தகம், பண்டைய இஸ்ரவேலர்கள் தங்கள் நாளில் சவால்களை எதிர்கொண்டபோது, யோசுவாவினுடைய வாழ்க்கையின் மூலம் தேவன் அவர்களுக்கு என்ன சாதித்தார் என்பதை நினைவூட்டியது. அநேக வழிகளில், இன்று நம் வாழ்க்கையில் இதே போன்ற சவால்களை எதிர்ப்படுகிறோம். ஆனால், இந்தத் தொடரில் நாம் பார்க்கப்போகும் பிரகாரம், யோசுவாவின் புத்தகம், இஸ்ரவேலர் தங்கள் நாளில் தேவன் என்ன செய்து கொண்டிருந்தார் என்பதற்கான வைராக்கியத்தைப் புதுப்பிக்க வாய்ப்புகளை அளித்தது. மேலும் இது உங்களுக்கும் எனக்கும் புதுப்பித்தலுக்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. இந்த புத்தகத்தைப் பற்றி நாம் மேலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கற்றுக்கொள்ளும்போது, பழைய ஏற்பாட்டில் யோசுவா மூலம் தேவன் என்ன செய்தார் என்பதைப் பற்றிய நமது விழிப்புணர்வில் நாம் வளர்வது மட்டுமல்லாமல், நம்முடைய பெரிய யோசுவாவாகிய நம்முடைய இரட்சகராகிய இயேசுவின் மூலம் தேவன் சாதித்த, நிறைவேற்றும் மற்றும் நிறைவேற்றப்போகும் அனைத்தையும் பற்றிய நமது விழிப்புணர்விலும் நாம் வளர்வோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.